بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلّی علی رسوله الكريم　　وعلی عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 15

ஆசிரியர் முஸ்லம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

05 ஷஃபான் 1440 ஹிஜ்ரி கமரி 11 ஷஹாதத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
11 ஏப்ரல் 2019

### அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ مَثَلَ عِيْسٰى عِنْدَ اللّٰهِ كَمَثَلِ اٰدَمَ ؕ خَلَقَهٗ مِنْ تُرَابٍ ثُمَّ قَالَ لَهٗ كُنْ فَيَكُوْنُ ○

நிச்சயமாக அல்லாஹ்விடம் ஈஸாவின் நிலை, ஆதமின் நிலையைப் போன்றதாகும். (ஆதமாகிய) அவரை அவன் காய்ந்த மண்ணிலிருந்து படைத்தான். பின்னர் அவரைக் குறித்து நீர் உருவாகுக என்று அவன் கூறியதும் அவர் உருவாகத் தொடங்கினார். (3:60)

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொல்லும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்தக் கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்போடு தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெற்றவர்களின் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

*(10 வது இதழின் தொடர்ச்சி…)*

அன்பின் காரணமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இந்த விஷயம் பயனளிக்கக்கூடியதாக இருக்கும் என்று கருதி சிந்திக்காமலும் புரியாமலும் ஹஸ்ரத் அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் அதை வழிமொழிந்தார்கள். மேலும் முன்ஷி சாஹிபின் இந்தக் கூற்று சரியானதாகும். ஹுஸூர் (அலை) அவர்களும் இவ்விஷயங்களைப் பலவந்தமாக ஒப்புக் கொள்ள வைக்க வேண்டும் என்று வினவினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிரித்தவாறு, நம்முடைய நண்பர்கள் இத்தகைய குணங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று கூறினார்கள்''

நான் அச்சமயம் எவ்வளவு வெட்கத்திற்குள்ளானேன் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான் என மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை என்ற நூல், பக்கம் 18,19)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கிஷ்தி நூஹ் என்ற தமது நூலில் அறிவுரை செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

''எவர் தன்னுடைய மனைவி மற்றும் அவர்களுடைய நெருங்கிய உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள மாட்டாரோ அவர் என்னுடைய ஜமாஅத்தைச் சார்ந்தவரல்ல,''

இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா முஸஃப்பர் அஹ்மது நாஸிர் சாஹிப் (நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா) அவர்கள் நிகழ்த்தினார்கள். அன்னாரது சொற்பொழிவின் தலைப்பு ''**ஐவேளைத் தொழுகைகள், துஆ (பிரார்த்தனை), இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு) மற்றும் திக்ரே இலாஹி (இறைவனை நினைவு கூர்தல்) ஆகியவற்றின் முக்கியத்துவம்**'' என்பதாகும்.

அன்னார் தமது சொற்பொழிவில் திருக்குர்ஆன், நபிமொழி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் இந்த அனைத்து விஷயங்களையும் எடுத்துக் கூறினார்கள்.

மதிப்பிற்குரிய மவ்லவி சாஹிப் அவர்கள் தொழுகை தொடர்பான ஹுஸூர் அவர்களது மேற்கோள்களை எடுத்துக் கூறினார்கள். ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்:

''முன்னவர்களுடன் இணையக்கூடிய பின்னவர்களின் இந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர்களின் மீதும் இது கடமையாகும். எவ்வாறு சஹாபாக்கள் தங்களுடைய இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்தினார்களோ அதேபோன்று நாமும் நம்முடைய இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்த வேண்டும். மேலும் உலகத்திலேயே மூழ்கி விடாதீர்கள். ஜமாஅத் அமைப்பு மற்றும் கிளை அமைப்புகளிலிருந்து எங்கள் ஜமாஅத்தில் இத்தனை சதவீதம் நபர்கள் தொழக்கூடியவர்களாகி விட்டார்கள்.

40, 50, 60 சதவீதம் நபர்கள் என அறிக்கைகள் வருகிறது. நாம் எதுவரை 100 சதவீதம் தொழுகையாளிகளை உருவாக்கவில்லையோ அதுவரை நிம்மதியாக அமரக் கூடாது. ஜமாஅத் அமைப்பு மட்டுமல்ல. மாறாக, ஒவ்வொருவரும் தாம்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்…)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**எவர் அல்லாஹ்விற்காகப் பணிவையும், தாழ்மைக் குணத்தையும் மேற்கொள்வாரோ அல்லாஹ் அவருடைய அந்தஸ்த்தை உயர்த்துவான். மேலும் எவர் ஆணவம் கொள்வாரோ அல்லாஹ் அவரை இழிவுபடுத்துவான்**

**கட்டுப்படுதல் மற்றும் கலப்பற்ற தன்மையில் சிறந்து விளங்கிய பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் ஹவ்லி பின் அபீ ஹவ்லி (ரலி), ஹஸ்ரத் ராஃபி பின் அல்முஅல்லா (ரலி), ஹஸ்ரத் துவிஷ்ஷிமாலைன் உமைர் பின் அப்தே அம்ர் (ரலி), ஹஸ்ரத் ராஃபி பின் யஸீது (ரலி), ஹஸ்ரத் ஸஃப்வான் பின் அப்தே கைஸ் (ரலி), ஹஸ்ரத் ஹவ்வாத் பின் ஜுபைர் அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் ரபீஆ பின் அக்ஸம் (ரலி), ஹஸ்ரத் ரிஃபாஃ பின் அம்ர் ஜுஹனீ (ரலி), ஹஸ்ரத் ஸைது பின் வதீஆ (ரலி), ஹஸ்ரத் ரபீ பின் ராஃபி அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் ஸை பின் முஸைன் (ரலி), ஹஸ்ரத் இயாஸ் பின் ஸுஹைர் (ரலி), ஹஸ்ரத் ரிஃபா பின் அம்ர் அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் ஸியாத் பின் அம்ர் (ரலி), ஹஸ்ரத் சாலிம் பின் உமைர் பின் சாபித் (ரலி), ஹஸ்ரத் சுராக்கா பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் சாயிப் பின் மஸ்ஊன் (ரலி), ஹஸ்ரத் ஆஸிம் பின் கைஸ் (ரலி), ஹஸ்ரத் துஃபைல் பின் மாலிக் பின் ஹன்ஸா (ரலி), ஹஸ்ரத் துஃபைல் பின் நுஃமான் (ரலி), ஹஸ்ரத் ஸஹ்ஹாக் பின் அப்தே அமர் (ரலி), ஹஸ்ரத் ஸஹ்ஹாக் பின் ஹாரிஸா (ரலி), ஹஸ்ரத் கல்லாத் பின் சவைது (ரலி), ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அன்ஸாரி (ரலி) ஆகியோர் பற்றி நற்குறிப்புகள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 01 மார்ச் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **01 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

பத்ர் போரில் பங்கு பெற்ற சஹாபாக்களின் நற்குறிப்பின் தொடர் எடுத்தக் கூறப்பட்டு வருகின்றது. இன்றும் பத்ர் போர் சஹாபாக்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். முதலாவது சஹாபி ஹஸ்ரத் ஹவ்லி பின் அபீ ஹவ்லி (ரலி) ஆவார்கள். ஹஸ்ரத் ஹவ்லி (ரலி) அவர்கள் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

அபூ மஃஷர் மற்றும் முஹம்மது பின் உமர் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஹவ்லி அவர்கள் பத்ர் போரில் தமது மகனுடன் கலந்து கொண்டார்கள். மகனின் பெயரை அவர்கள் குறிப்பிடவில்லை.

முஹம்மது பின் இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஹவ்லி (ரலி) அவர்கள் தமது சகோதரரான மாலிக் பின் ஹவ்லி அவர்களுடன் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள்.

ஒரு கூற்றின் அடிப்படையில், ஹஸ்ரத் ஹவ்லி (ரலி) அவர்களுடன் அன்னாரது இரண்டு சகோதரர்களான ஹஸ்ரத் பிலால் பின் அபீ ஹவ்லி (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹவ்லி (ரலி) அவர்களும் இருந்தனர் என்று வருகிறது.

ஹஸ்ரத் ஹவ்லி அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 299 ஹவ்லி பின் அபீ ஹவ்லி – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ராஃபி பின் அல் முஅல்லா (ரலி) ஆவார்கள். அன்னார் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஹபீபைச் சார்ந்தவர் ஆவார். அன்னாரின் தாயாரின் பெயர் இதாம் பின்த் அவ்ஃப் ஆகும். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ராஃபி மற்றும் ஹஸ்ரத் ஸஃப்வான் பின் ரிஸா ஆகியோருக்கிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இந்த இரண்டு சஹாபாக்களும் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள்.

சில அறிவிப்புகளில், இந்த இரண்டு சஹாபாக்களும் பத்ர் போரில் ஷஹீதானர்கள் என்றும் சில அறிவிப்புகளில் ஹஸ்ரத் ஸஃப்வான் பின் ரிஸா அவர்கள் பத்ர் போரில் ஷஹீதாகவில்லை என்றும் வருகிறது.

மூஸா பின் உக்பா அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் ராஃபி மற்றும் அன்னாரது சகோதரரான ஹஸ்ரத் பிலால் பின் முஅல்லா ஆகிய இருவரும் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். மேலும் ஹஸ்ரத் ராஃபி அவர்களை ஹஸ்ரத் இக்ரிமா பின் அபூஜஹில் பத்ர் போரில் ஷஹீதாக்கினார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 450 ராஃபி பின் அல்முஅல்லா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 484,485 ராஃபி பின் அல்முஅல்லா (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி துவிஷ்ஷிமாலைன் உமைர் பின் அப்தே அம்ர் (ரலி) ஆவார்கள். அன்னாரது உண்மையான பெயர் உமைர் ஆகும். அன்னாரது சுட்டுப்பெயர் அபூ முஹம்மது ஆகும். அன்னார் துஷ்ஷிமாலைன் என்று அழைக்கப்பட்டார்கள். இது அன்னாரது பெயர் இல்லை. மாறாக, அன்னார் இடது கையினால் அதிக பணிகளைச் செய்து வந்ததினால் இந்தச் சுட்டுப் பெயர் அன்னாருக்கு கிடைத்தது.

இன்னொரு அறிவிப்பில், அன்னார் தனது இரண்டு கரங்களினாலும் பணி செய்து வந்தார்கள். எனவே அன்னார் துல் யதைன் என்றும் அழைக்கப்பட்டார்கள். அன்னார் பனூ ஸுஹராவின் நட்புக் கோத்திரமான பனூ குதாவைச் சார்ந்தவர். ஹஸ்ரத் உமைர் அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா வந்து சஅது பின் கைஸ்மாவுடன் தங்கினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் யஸீத் பின் ஹாரிஸுடன் அன்னாருக்கு சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இந்த இரண்டு சஹாபாக்களும் பத்ர் போரில் ஷஹீதானார்கள். உஸாமா ஜஷ்மி என்பவன் அன்னாரை ஷஹீதாக்கினான்.

ஷஹாதத்தின்போது அன்னாருடைய வயது 30 ஆக இருந்தது. அத்தப்காத்துல் குபுராவில் கொலை செய்தவனின் பெயர் அபூ உஸாமா ஜஷ்மி என வந்துள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 124,125 துவில்யதைன்.... – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 327 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 217 துவிஷ்ஷிமாலைன் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ராஃபி பின் யஸீத் (ரலி) ஆவார். ஓர் அறிவிப்பில் அன்னாரது பெயர் ராஃபி பின் ஸைது என்றும் வந்துள்ளது. அன்னார் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ சவ்ர் பின் அப்துல் அஷ்ஹலைச் சார்ந்தவர். புகழ்பெற்ற சஹாபியான ஹஸ்ரத் சஅது பின் மஆஸ் அவர்களின் சகோதரி அக்ரப் பின்த் மஆஸ் அன்னாரின் தாயார் ஆவார்கள். உஸைதும், அப்துர் ரஹ்மானும் அவர்களுடைய இரண்டு மகன்கள் ஆவர். இவ்விருவரின் தாயார் அக்ரப் பின்தே சலாமா ஆகும். ஹஸ்ரத் ராஃபி அவர்கள் பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள்.

ஓர் அறிவிப்பில், அன்னார் பத்ர் போர் நாளில் சயீது பின் ஸைது அவர்களின் ஒட்டகத்தில் பயணம் செய்தார்கள். மேலும் உஹது போரில் ஷஹீதானார்கள் என்று வந்துள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 337 ராஃபி பின் யஸீத் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 235 ராஃபி பின் ஸைது – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸக்வான் பின் அப்தே கைஸ் (ரலி) ஆவார்கள். அபூ சபுஹ் அன்னாரது சுட்டுப் பெயர் ஆகும். அன்னார் அன்ஸாரிகளின் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனு ஸுரைக்கைச் சார்ந்தவர்கள். முதலாவது மற்றும் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள்.

அன்னார் தொடர்பான மிகவும் எடுத்துக் கூறத்தக்க விஷயம் என்னவென்றால், அன்னார் மதீனாவிலிருந்து ஹிஜ்ரத் செய்து பெருமானார் (ஸல்) அவர்களை சந்திக்க மக்கா சென்றார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவில்தான் இருந்தார்கள். அன்னார் அன்ஸாரி முஹாஜிர் என்று அழைக்கப்பட்டார்கள். மக்கா சென்று சிறிது காலம் அங்கு அன்னார் இருந்தார்கள்.

அதாவது ஹிஜ்ரத் செய்து பெருமானார் (ஸல்) அவர்களிடம் மக்கா வந்து விட்டார் என்றும் புரிந்து கொள்ளலாம். பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். உஹது போரில் ஷஹாதத் அந்தஸ்தை பெற்றார்கள். அன்னாரை அபூ ஹகம் பின் அக்னஸ் என்பவன் ஷஹீதாக்கினான். ஹஸ்ரத் ஸக்வான் பின் அப்தே கைஸ் அன்ஸாரி முஹாஜிர் என்று அழைக்கப்பட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 210 ஸக்வான் பின் அப்தே கைஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாமா இப்னு சஅது தப்காத்துல் குப்ராபில் எழுதுகின்றார்கள்: முஸ்லிம்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த நேரத்தில் குரைஷிகள் கடுமையான கோபத்தில் இருந்தார்கள். ஹிஜ்ரத் செய்து சென்ற இளைஞர்கள் மீது அவர்களுக்கு அதிகமான கோபம் வந்தது. அன்ஸார்களைச் சார்ந்தவர்கள் பைஅத்தே உக்பாவில் பெருமானார் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். அதற்குப் பிறகு திரும்பி மதீனா சென்று விட்டார்கள். ஆரம்ப கால முஹாஜிரீன்கள் மதீனா சென்றடைந்த பிறகு இந்த சஹாபி மக்கா வந்தடைந்தார். பிறகு அன்னாரது சஹாபாக்களுடன் இணைந்து மதீனா வந்தார்கள். இந்த அடிப்படையில்தான் அன்னார் அன்ஸாரி முஹாஜிர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

இந்த சஹாபாக்களில் ஹஸ்ரத் ஸக்வான் பின் அப்தே கைஸ், ஹஸ்ரத் உக்பா வின் வஹப், ஹஸ்ரத் அப்பாஸ் பின் உபாதா மற்றும் ஹஸ்ரத் பயாத் பின் லபீது ஆகியோரும் இருந்தனர். இதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் அலி ஆகியோரையும் கைதியாகவும், பலவீனமாவர்களாகவும் இருந்தவர்களைத் தவிர மற்ற அனைத்து சஹாபாக்களும் மதீனா சென்றி விட்டனர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 1 பக்கம் 175 ஸிக்ர் இஸ்ன் ரஸூலல்லாஹி (ஸல்) லில் முஸ்லிமீன ஃபில் ஹிஜ்ரரத்தி இலல் மதீனத்தி – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சுஹைல் பின் சாஹிப் அறிவிக்கின்றார்: பெருமானார் (ஸல்) அவர்கள் உஹது போருக்காகச் சென்றபோது ஓர் இடத்தை சுட்டிக் காட்டியவாறு சஹாபாக்களிடம், இங்கு யார் செல்வார்? என்று கேட்டார்கள். அதற்கு பனு ஸுரைக்கைச் சேர்ந்த ஸக்வான் பின் அப்தே கைஸ் என்ற சஹாபி எழுந்து நின்று, யா ரஸூலல்லாஹ்! நான் செல்வேன் என்று கூறினார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் யார்? என்று கேட்டார்கள். அப்போது அவர்கள் நான் ஸக்வான் பின் அப்தே கைஸ் ஆவேன் என்று கூறினார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்களை அமரும்படி சைகை செய்து கூறினார்கள். அன்னார் இந்த விஷயத்தை மூன்று முறை கூறினார்கள்.

பிறகு அன்னார் இந்த இந்த இடத்திற்கு செல்லுங்கள் என்று கூறினார்கள். அதற்கு ஸக்வான் அவர்கள், யா ரஸூலல்லாஹ்! நான்தான் இடத்திற்குச் செல்வேன் என்று கூறினார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாளைய தினம் சுவர்க்கத்தின் பசுமை நிறைந்த தோட்டத்தில் நடந்து செல்லக்கூடிய அந்த நபரை எவராவது காண விரும்பினால் இந்த நபரைப் பார்க்கட்டும்.

இதற்குப் பிறகு ஹஸ்ரக் ஸக்வான் அவர்கள் தமது குடும்பத்தைச் சார்ந்தவர்களிடம் விடைபெறுவதற்காகச் சென்றார்கள். அன்னாரது மனைவிகளும், மகளும், நீங்கள் எங்களை விட்டு விட்டு செல்கின்றீர்களா? என்று கேட்டனர். அதற்கு அன்னார் அவர்களை விட்டு விலகி நின்றவாறு அவர்களை நோக்கி, இனி கியாமத் நாளில்தான் நாம் சந்திப்போம் என்று கூறினார்கள். பிறகு அன்னார் உஹது போரில் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

(மஃரூஃபத்துஸ் சஹாபா லா பீ நயீம் தொகுதி 2 பக்கம் 248 ஸக்வான் பின் அப்தே கைஸ் பின் காலித் ஹதீஸ் எண் 2621 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உஹது நாளன்று பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், ஸக்வான் பின் அப்தே கைஸ் பற்றி யாருக்காவது தெரியுமா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அலி அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களே! நான் ஒரு பயணியைப் பார்த்தேன். அவன் ஸக்வான் அவர்களை பின்தொடர்ந்து சென்றவாறு அன்னாருக்கு அருகில் சென்று, இன்று நீங்கள் உயிர் பிழைத்து விட்டால் நான் தப்பிக்க முடியாது என்று கூறியவாறு அன்னாரைத் தாக்கி ஷஹீதாக்கினான். மேலும் அவன் நான் இப்னு இலாஜ்

ஆவேன் என்று கூறியவாறு தாக்குதல் தொடுத்தான். எனவே நான் அவன் மீது தாக்குதல் தொடுத்தேன். அவனது காலை தாக்கி பாதி தொடையை வெட்டினான். பிறகு அவனைக் குதிரையிலிருந்து இறக்கி அவனைக் கொன்று விட்டேன். அவனது பெயர் அபூ ஹகம் பின் அக்னஸ் ஆகும் என்று கூறினார்கள்.

(கிதாபுல் மகாஸி லில்வாக்தி தொகுதி 1 பக்கம் 245 பாப் கஸ்வா உஹது – 2013–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஹவ்வாத் பின் ஜுபைர் அன்ஸாரி ஆவார்கள். அன்னாரது சுட்டுப்பெயர் அப்துல்லாஹ் மற்றும் அபூ சாலிஹ் ஆகும். அன்னார் பனு சஃலபாவைச் சார்ந்தவர். ஹஸ்ரத் ஹவ்லத் பின் ஜுபைர் மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் ஆகிய இருவரும் சகோதரர்கள் ஆவர். பெருமானார் (ஸல்) அவர்கள் உஹது போரில் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்ட வில் எய்யும் திறமை பெற்ற ஐம்பது நபர்களில் இவரும் ஒருவர் ஆவார். ஹஸ்ரத் ஹவ்வாத் அவர்கள் நடுத்தர உயரத்தைக் கொண்டவர். அன்னார் ஹிஜ்ரி 40 வது ஆண்டில் தமது 74 வது வயதில் மதீனாவில் மரணமடைந்தார்கள். ஓர் அறிவிப்பில், அன்னார் மரணமடையும்போது 94 வயதாக இருந்தது என்று வந்துள்ளது. அன்னார் தமது தலை முடிக்குமருதானி போடக்கூடியவர்களாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஹவ்வாத் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இணைந்து பத்ர் போரில் கலந்து கொள்வதற்காகச் சென்றார்கள். ஆனால் வழியில் ஒரு கல் அவர்களின் மீது பட்டதன் காரணமாக காயமுற்றார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை மதீனாவிற்குத் திருப்பி அனுப்பி விட்டார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் போர் செல்வத்திலும் நற்கூலியிலும் அன்னாரையும் இணைத்துக் கொண்டார்கள்.

ஆக அன்னார் பத்ர் போரில் பங்கு பெற்ற சஹாபாக்களைப் போன்றவரே ஆவார்கள். உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் ஹவ்வாத் கூறுகின்றார்கள்: ஒரு முறை நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் மர்ரஸ் ஸஹ்ரான் என்ற இடத்தில் தங்கினோம். நான் எனது கூடாரத்தை விட்டு வெளியே வந்தேன். அப்போது சில பெண்கள் பேசிக் கொண்டிருந்தனர். அதைப் பார்த்து எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. எனவே நான் திரும்பிச் சென்று ஒரு மேலங்கியை அணிந்து அவர்களுடன் வந்து அமர்ந்து விட்டேன். தம்மைத்தாமே மறைத்துக் கொண்டார்கள். மேலும் பெண்களின் பேச்சை கேட்பதற்காக அங்கே அமர்ந்து விட்டார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கூடாரத்தை விட்டு வெளியே வந்தார்கள். நான் பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து அஞ்சினேன்.

நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம், எனது ஒட்டகம் வெளியே ஓடி வந்து விட்டது. நான் அதைத் தேடுகிறேன் என்று கூறினேன். பிறகு அன்னார் சென்று விட்டார்கள். நானும் அவர்களுக்குப் பின்னாலேயே சென்றேன். மேலும் அன்னார் தான் போர்த்தியிருந்த போர்வையை என்னிடம் கொடுத்து புற்கள் இருந்த இடத்திற்குள் சென்றார்கள். இயற்கைத் தேவைகளை முடித்த பிறகு அன்னார் வுளூ செய்தார்கள். மேலும் திரும்பி வந்தார்கள். அன்னாரது முகத்திலிருந்து தண்ணீர் துளிகள் அன்னாரின் நெஞ்சுப் பகுதியில் விழுந்து கொண்டிருந்தது.

பிறகு அன்னார் நகைச்சுவையாக என்னிடம், அப்துல்லாஹ்வே! அந்த ஒட்டகம் என்ன ஆனது? என்று கேட்டார்கள். எந்த ஒட்டகமும் தொலையவில்லை. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த விஷயங்களைக் கேட்பதற்காக இவர் வெறுமனே அமர்ந்துள்ளார். இது நல்ல விஷயம் கிடையாது என்ற உணர்வு ஏற்பட்டது.

அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வாறிருப்பினும் நாங்கள் சென்று விட்டோம். இதற்குப் பிறகு எப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் எப்போது என்னைச் சந்தித்தாலும் சலாம் கூறிவார்கள். பிறகு அப்துல்லாஹ்வே! அந்த ஒட்டகம் என்ன ஆனது? என்று கேட்பார்கள். இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம் நகைச்சுவை செய்து வந்தார்கள். இதனால் நான் மதீனவில் மறைந்து இருக்கக் தொடங்கினேன்.

இவ்வாறு பள்ளிவாசல் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் சபைகளிலிருந்தும் தனித்திருக்கத் தொடங்கினேன். இந்த விஷயம் நடைபெற்று சிறிது காலம் ஆன பிறகு நான் பள்ளிவாசலுக்கு சென்றேன். தொழுகைக்காக நின்றேன். பெருமானார் (ஸல்) அவர்களும் தமது கூடாரத்திலிருநது வெளியே வந்தார்கள். மேலும் அன்னார் இரண்டு ரக்அத் தொழுதார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் திரும்பிச் சென்று விடுவார்கள். மேலும் என்னை விட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கையில் நான் நீண்ட தொழுகையை தொழுதேன்.

ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ்வே! எவ்வளவு நீண்ட தொழுகையை நீர் தொழுதாலும் நான் இங்குதான் இருப்பேன் என்று கூறினார்கள். எனவே நான் எனது உள்ளத்தில், அல்லாஹ்வின் மீது ஆணையாக! பெருமனார் (ஸல்) அவர்களிடம் மன்னிப்பு கேட்டு என் தொடர்பாக அவர்களது உள்ளத்திலுள்ளவற்றை சரி செய்ய வேண்டும் என்று எண்ணினேன். நான் சலாம் கூறிய பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ்வே! உங்கள் மீது சாந்தி உண்டாவதாக. ஓடிச் சென்று விட்ட அந்த ஒட்டகத்தின் விவகாரம்தான் என்ன? என்று கேட்டார்கள்.

அதற்கு நான், உங்களை உண்மையுடன் அனுப்பிய அந்த இருப்பின் மீது ஆணையாக! நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நாளிலிருந்து அந்த ஒட்டகம் எங்கும் ஓடிச் செல்லவில்லை என்று கூறினேன். பிறகு அன்னார் அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டுவானாக என்று மூன்று முறை கூறினார்கள். இதற்குப் பிறகு ஒருபோதும் அன்னார் இது தொடர்பாக என்னிடம் எதையும் கூறியதில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 362–364 அப்தில்லாஹ் பின் ஜுபைர், ஹவ்வாத் பின் ஜுபைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 190 ஹவ்வாத் பின் ஜுபைர் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆக ஒன்று இந்த விஷயம் தொடர்பாக என்னிடம் மறைக்க வேண்டாம். ஏனென்றால் உண்மை சம்பவம் என்ன என்பது எனக்குத் தெரியும். மற்றொன்று இவ்வாறு மக்களது சபைகளில் பேசக்கூடியவற்றைத் தேவையில்லாமல் அமர்ந்து கேட்பதும் தவறாகும்.

ஹஸ்ரத் ஹவ்வாத் கூறுகின்றார்கள்: ஒரு முறை நான் நோயுற்றேன். பெருமானார் (ஸல்) அவர்கள் என்னைச் சந்திக்க வந்தார்கள். நான் குணமடைந்த பிறகு அன்னார் என்னிடம், ஹவ்வாதே! உமது உடல் குணமாகி விட்டது. எனவே அல்லாஹ்விடம் என்ன வாக்குறுதியை நீர் செய்தீரோ அதை நிறைவேற்றுவீராக என்று கூறினார்கள். அதற்கு அல்லாஹ்விடம் எந்த வாக்குறுதியும்

செய்யவில்லையே என்று கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நோயுற்றிருக்கின்ற எந்தவொரு நோயாளியும் அல்லாஹ் எனக்கு ஆரோக்கியத்தைப் வழங்கினால் இதை செய்வேன். அதைச் செய்வேன் என்று எண்ணம் கொள்ளாமல் இருந்தது கிடையாது. எனவே அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை, கூறிய விஷயத்தை நிறைவேற்ற வேண்டும்.

(முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 467 கிதாப் மஃரூஃபத்தஸ் சஹாபா, பாப் ஸிக்ர் மனாகிப் ஹவ்வாத் பின் ஜுபைர் அல்அன்ஸாரி ஹதிஸ் எண் 5750 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஆக இது எத்தகைய விஷயம் என்றால் நம் அனைவருக்கும் சிந்திக்க வேண்டிய, கவனம் செலுத்தக்கூடிய ஒன்றாகும்.

அகழ் போரின் சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பனூ குரைழாவைச் சேர்ந்தவர்கள் உடன்படிக்கையை மீறியதாக தகவல் கிடைத்தது. எனவே ஒரு குழுவை அன்னார் அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். இது தொடர்பாக சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதியுள்ளார்கள். அந்த சம்பவம் இவ்வாறாகும்:

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பனூ குரைழாவைச் சார்ந்தவர்கள் ஏமாற்றியது தெரிய வந்தபோது அன்னார் முதலில் இரண்டு மூன்று முறை மறைமுகமாக சுபைர் பின் அல்அவாம் மூலமாக நிலைமைகளைத் தெரிந்து கொள்வதற்காக அனுப்பினார்கள். பிறகு அவ்ஸ் மற்றும் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவரான சஅது பின் மஆஸ் மற்றும் சஅது பின் உபாதா மற்றும் சில கண்ணியமிக்க சஹாபாக்களின் ஒரு குழுவை பனூ குரைழாவிடம் அனுப்பியவாறு அவர்களிடம், ஏதாவதொரு அபாயகரமான செய்தி என்றால் திரும்பி வந்து அந்த செய்தியை வெளிப்படையாக கூறாமல் சைகையாக எடுத்துக் கூறுங்கள்.

ஏனென்றால் இதனால் மக்களிடத்தில் பதற்றம் ஏற்படக் கூடாது என்று கட்டளை பிறப்பித்திருந்தார்கள். இந்த மக்கள் அவர்கள் பனூ குரைழா தங்கியிருந்த இடத்தை அடைந்தபோது அவர்களது தலைவனான கஅப் பின் அஸது என்ற தீயவன் இவர்களை மிகவும் ஆணவத்துடன் சந்தித்தான். மேலும் சஅது பின் மஆஸ் மற்றும் சஅது பின் உபாதா ஆகியோர் உடன்படிக்கையைப் பற்றி எடுத்துக் கூறியபோது அவனும் அவனது கோத்திரத்தைச் சார்ந்த மக்களும், செல்லுங்கள்; முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் எந்த உடன்படிக்கையும் கிடையாது என்று கூறினார்கள். இந்த வார்த்தையைக் கேட்ட சஹாபாக்களின் அந்த குழு எழுந்து சென்று விட்டது. மேலும் சஅது பின் மஆஸ் மற்றும் சஅது பின் உபாதா ஆகிய இருவரும் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் நிலைமைகள் தொடர்பாக தகவலைத் தெரிவித்தனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 584–585)

இந்த சஹாபாக்களில் ஹஸ்ரத் ஹவ்வாத் பின் ஜூபைர் அவர்களும் இருந்தார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 456 பாப் கஸ்வா ஹந்தக்... 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹல்லாத் அவர்களை தமது குதிரையில் பனூ குரைழாவிற்கு அனுப்பினார்கள். அந்த குதிரையின் பெயர் ஜனாஹ் ஆகும்.

(முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 466 கிதாப் மஃரூஃபத்தஸ் சஹாபா, பாப் ஸிக்ர் மனாகிப் ஹவ்வாத் பின் ஜுபைர் அல்அன்ஸாரி ஹதிஸ் எண் 5747 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் ஹல்லாத் அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை நாங்கள் ஹஸ்ரத் உமர் அவர்களுடன் ஹஜ்ஜிற்காக சென்றோம். இந்த குழுவில் எங்களுடன் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜராஹ் மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோரும் இருந்தனர். அப்போது மக்கள் ஸராரின் கவிதையை கூறுங்கள் என்று கூறினர். ஸரார் என்பவர் மக்கா வெற்றியின்போது ஈமான் கொண்ட குரைஷிகளின் ஒரு கவிஞர் ஆவார். ஹஸ்ரத் உமர் அவர்கள், அபூ அப்துல்லாஹ் அவருடைய கவிதைகளையே எடுத்துக் கூறட்டும் என்று கூறினார்கள். எனவே நான் அவர்களுக்குக் கவிதைகளை கூறினேன். எதுவரை என்றால் மாலைப்பொழுதாகி விட்டது. ஹஸ்ரத் உமர் அவர்கள், போதும்! இப்போது மாலைப்பொழுதாகி விட்டது என்று கூறினார்கள்.

(அல் அஸாபா தொகுதி 2 பக்கம் 292 ஹவ்வாத் பின் ஜுபைர் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 6 பக்கம் 10 ஸர்ரார் பின் கத்தாப் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ரபீஆ பின் அக்ஸம் (ரலி) ஆவார்கள். அன்னாரது சுட்டுப் பெயர் அபூ யஸீத் ஆகும். ஹஸ்ரத் ரபிஆ குள்ளமானவராகவும், தடித்த உடலைக் கொண்டவரும் ஆவார். அன்னார் அஸது பின் ஹுஸைமா கோத்திரத்தைச் சார்ந்தவர். அன்னார் முஹாஜிர் சஹாபாக்களில் ஒருவராக இருந்தார்கள். மதீனா ஹிஜ்ரத்திற்குப் பிறகு சில சஹாபாக்களுடன் அன்னார் ஹஸ்ரத் முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிரின் வீட்டில் தங்கினார்கள்.

பத்ர் போரில் பங்கு பெற்றபோது அன்னாரது வயது 30 ஆகும். பத்ர் போர் மட்டுமின்றி உஹது, அகழ் மற்றும் ஹுதைபிய்ய உடன்படிக்கை மற்றும் கைபர் போரிலும் அன்னார் பங்கு பெற்றார்கள். கைபர் போரில் அன்னார் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள். அன்னாரை ஹாரிஸ் என்ற பெயருடைய யூதன் நதாஃ என்ற இடத்தில் ஷஹீதாக்கினான். நதாஃ கைபரில் இருக்கின்ற ஒரு கோட்டையின் பெயராகும். ஷஹாதத்தின்போது அன்னாரது வயது 37 ஆகும்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 257 ரபீஆ பின் அக்ஸம் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 66,70 அப்தில்லாஹ் பின் ஜஹ்ஷ், ரபீஆ பின் அக்ஸம் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ரிஃபாஃ பின் அம்ர் அல்ஜஹனி ஆவார்கள். வதீஆ பின் அம்ர் என்றும் கூறப்படுகிறது. ஹஸ்ரத் ரிஃபாஃ பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். அன்னார் அன்ஸார் கோத்திரத்தின் பனூ நஜ்ஜாரின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 287 ரிஃபாஃ பின் அம்ர் அல்ஜஹனி (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸைது பின் வதீஆ (ரலி) ஆவார்கள். அன்ஸார் கோத்திரத்தின் ஹஸ்ரஜை சார்ந்தவர்கள். அன்னார்

பைஅத்தே உக்பா மற்றும் பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். உஹது போரில் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 377 ஸைது பின் வதீஆ (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரின் தாயார் உம்மே ஸைது பின்த் ஹாரிஸ் ஆவார்கள். ஸைனப் பின் சஹல் அன்னாரது மனைவியின் பெயராகும். அவர்கள் மூலமாக அன்னாருக்கு சஅது பின் ஸைது, அமாமா மற்றும் உம்மே குல்ஸூம் என்ற மூன்று குழந்தைகள் இருந்தனர். அன்னாரது மகன் சஅது ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஈராக் வந்து விட்டார்கள். அங்கு அக்ரகூஃப் என்ற இடத்தில் வசித்து வந்தார்கள். அவ்விடமானது ஈராக்கிலுள்ள பக்தாதிற்கு அருகிலுள்ள ஒரு நகரமாகும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 410 ஸைது பின் வதீஆ (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 155 ஸேரே லஃப்ஸ் அக்ரகூஃப் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ரபீஃ பின் ராஃபி அன்ஸாரி (ரலி) ஆவார்கள். அன்னாரது பாட்டனாரின் பெயரில் கருத்து வேறுபாடு உள்ளது. ஒரு கூற்றிற்கேற்ப ஹாரிஸ் என்றும் மற்றொரு கூற்றிற்கேற்ப ஸைது என்றும் வந்துள்ளது. ஹஸ்ரத் ரபீஃ பின் ராஃபி அவர்கள் பனூ அஜ்லான் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். அன்னார் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 356,357 ரபீ பின் வதீஆ (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 252 ரபீ பின் வதீஆ (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸைது பின் முஸைன் (ரலி) ஆவார்கள். முஸைன் பின் கைஸ் அன்னாரின் தந்தையின் பெயர் ஆகும். ஹஸ்ரத் ஸைது அவர்களின் பெயர் யஸீது பின் முஸைன் என்றும் கூறப்பட்டுள்ளது. அன்னார் ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர். பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றுள்ளார்கள். மதீனா ஹிஜ்ரத் செய்த நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது மற்றும் ஹஸ்ரத் மிஸ்தஃ பின் உஸாஸ ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அன்னாருக்கு உமர் என்ற மகனும் ரம்லா என்ற மகளும் இருந்தனர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 407 யஸீது பின் முஸைன் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 375 ஸைது பின் முஸைன் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் இயாஸ் பின் ஸுஹைர் (ரலி) ஆவார்கள். அபூ சஅது அன்னாரது சுட்டுப் பெயர். ஹஸ்ரத் இயாஸ் அவர்களின் தாயாரின் பெயர் சலமா பின்த் ஆமிர் ஆகும். அன்னார் ஃபஹர் கோத்திரத்தைச் சார்ந்தவர். அன்னார் அபிஸீனியாவிற்கு இரண்டாவது முறையாக ஹிஜ்ரத் செய்தபோது கலந்து கொண்டார்கள். அங்கிருந்து திரும்பி வந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் குல்ஸூம் பின் அல்ஹதமுடன் தங்கினார்கள். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களில் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 30 வது ஆண்டில் மதீனாவில் அன்னார் மரணமடைந்தார்கள். இன்னொரு அறிவிப்பில் அன்னாரது மரணம் சிரியாவில் நிகழ்ந்தது என்று வந்துள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 318,319 இயாஸ் பின் ஸுஹைர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 311 இயாஸ் பின் ஸுஹைர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ரிஃபா பின் அம்ர் அன்ஸாரி (ரலி) ஆவார்கள். அபூ வலீத் அன்னாரது சுட்டுப்பெயர். அன்னார் பனூ அவ்ஃப் பின் ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர். அன்னாரது தாயாரின் பெயர் உம்மே ரிஃபா ஆகும். அன்னார் 70 அன்ஸார்களுடன் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். மேலும் உஹது போரில் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 410,411 ரிஃபா பின் அம்ர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸியாத் பின் அம்ர் (ரலி) ஆவார்கள். அன்னார் இப்னு பிஷ்ர் என்றும் அழைக்கப்படுகின்றார்கள். அன்னார் அன்ஸார்களின் நண்பர் ஆவார்கள். பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். அன்னாரது சகோதரர் ஹஸ்ரத் ஸம்ராவும் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். அவர்களது தொடர்பு பனூ சாயிதா பின் கஅப் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். இன்னொரு கூற்றிற்கேற்ப அன்னார் பனூ சாயிதா பின் கஅப் பின் ஹஸ்ரஜின் விடுதலை செய்யப்பட்ட அடிமை ஆவார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 338 ஸியாத் பின் அம்ர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 2 பக்கம் 483 ஸியாத் பின் அம்ர் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சாலிம் பின் உமைர் பின் சாபித் ஆவார்கள். அன்ஸார் கோத்திரமான பனூ அம்ர் பின்அவ்ஃபைச் சார்ந்தவர்கள். பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். பத்ர், உஹது, அகழ் போர்களில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 387 சாலிம் பின் உமைர் பின் சாபித் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தபூக் போரின் சந்தர்ப்பத்தில் எந்த ஏழை சஹாபாக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து தபூக் போரில் கலந்து கொள்ள விரும்பினார்களோ, மேலும் தங்களிடம் பயணத்திற்கான வசதி இல்லாததனால் அழுதார்களோ அந்த சஹாபாக்களில் ஹஸ்ரத் சாலிம் அவர்களும் அடங்குவார்கள்.

இந்த ஏழு ஏழை சஹாபாக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். இவர்கள் தபூக் போரில் கலந்து கொள்ள விரும்பினர். இந்த சஹாபாக்கள் அன்னாரிடம் எங்களுக்கு ஏறிச் செல்ல ஏதாவதொன்றினைக் கொடுங்கள் என்று கேட்டார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களை ஏற்றிச் செல்லக் கூடியது எதுவும் என்னிடமில்லையே என்று கூறினார்கள். எனவே அந்த மக்கள் திரும்பிச் சென்றனர். செலவு செய்வதற்கு எதுவுமே

இல்லையே என்ற வருத்தத்தில் அவர்களின் கண்களில் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

وَّلَا عَلَى الَّذِيْنَ اِذَا مَآ اَتَوْكَ لِتَحْمِلَهُمْ قُلْتَ لَآ اَجِدُ مَآ اَحْمِلُكُمْ عَلَيْهِ
تَوَلَّوْا وَّ اَعْيُنُهُمْ تَفِيْضُ مِنَ الدَّمْعِ حَزَنًا اَلَّا يَجِدُوْا مَا يُنْفِقُوْنَ

அதாவது போர் அறிவிப்பு செய்யப்பட்ட போது தாங்கள் ஏறிச் செல்ல ஏதாவதொரு ஏற்பாட்டினை நீர் செய்ய வேண்டுமென்பதற்காக உம்மிடத்தில் வந்தவர்களிடம் குற்றம் எதுவும் இல்லை. இதற்கு நீர் உங்களை ஏற்றிச் செல்லக் கூடியது எதுவும் என்னிடமில்லையே என்று பதிலளித்தீர். (இப்பதிலைக் கேட்டு) அவர்கள் சென்று விட்டனர். (இறைவழியில்) செலவு செய்வதற்குத் தங்களிடம் எதுவும் இல்லையே என்ற கவலையினால் அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது (9:92) என்று கூறப்பட்டுள்ள இந்த வசனத்தில் எந்த மக்களைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ அதில் சாலிம் பின் உமைர் மற்றும் சஃலபா பின் ஸைது ஆகியோர் அடங்குவர்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சூரா தவ்பாவின் கீழ்க்கண்ட இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:

وَّلَا عَلَى الَّذِيْنَ اِذَا مَآ اَتَوْكَ لِتَحْمِلَهُمْ قُلْتَ لَآ اَجِدُ مَآ اَحْمِلُكُمْ عَلَيْهِ
تَوَلَّوْا وَّ اَعْيُنُهُمْ تَفِيْضُ مِنَ الدَّمْعِ حَزَنًا

அதாவது இந்த வசனம் பொதுவானதொன்று கிடையாது. மாறாக, இது எந்த நபர்களைச் சுட்டிக் காட்டுகின்றது என்றால் அந்த ஏழு ஏழை சஹாபாக்கள் அறப்போர் செய்வதற்குத் துடித்துக் கொண்டிருந்தனர். ஆனால் தனது உள்ளத்தின் ஆசையை நிறைவேற்றுவதற்கான பொருட்கள் அவர்களிடம் இருக்கவில்லை. அந்த மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, எங்களுக்கு ஏறிச் செல்ல ஏதாவதொன்றிற்கான ஏற்பாட்டினைச் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், நான் எந்த ஏற்பாட்டையும் செய்ய முடியாது என்று கூறினார்கள். எனவே அவர்களுக்கு இதனால் பெரும் துன்பம் ஏற்பட்டது. அவர்களது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் அவர்கள் திரும்பிச் சென்று விட்டனர்.

அவர்கள் திரும்பிச் சென்ற பிறகு இந்த அறிவிப்பு வருகின்றது. அதாவது அவர்கள் திரும்பிச் சென்ற பிறகு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் மூன்று ஒட்டகங்களை வழங்கினார்கள். மேலும் நான்கு முஸ்லிம்களும் வழங்கினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஒட்டகத்தை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் இந்த சம்பவத்தை ஏன் எடுத்துக் கூறுகின்றது என்றால், செல்வந்தர்கள், பயணத்திற்கான வழிகளை பெற்றிருந்தவர்கள் பொய்யான சாக்குப் போக்கைத் தேடினர். அவர்கள் இந்த ஏழை முஸ்லிம்களின் கலப்பற்றத்தன்மையோடு போட்டி போட்டு காட்டட்டும் என்பதற்காகவே ஆகும். சாக்குப் போக்கை தேடிக் கொண்டிருந்த சில மக்கள் செல்லவில்லை. ஆனால் ஏழைகளின் உணர்வு முற்றிலும் வேறொன்றாக இருந்தது.

அன்னார் மேலும் கூறுகின்றார்கள்: இந்த வசனத்திலிருந்து இதுவும் தெரிய வருகின்றது. அதாவது எந்த மக்கள் மதீனாவில் பின்தங்கி விட்டனரோ அவர்கள் அனைவரும் நயவஞ்சகர்கள் கிடையாது. மாறாக அவர்களில் கலப்பற்ற முஸ்லிம்களும் இருந்தனர். அவர்களிடம் செல்வதற்கான பொருட்கள் இல்லாததனால்தான் அவர்களால் செல்ல முடியவில்லை.

(தருஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) – தஃப்ஸீர் சூரத்துத் தவ்பா வசனம் 92)

இதனை விளக்கியவாறு மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: அபூ மூஸா இந்த மக்களின் தலைவராக இருந்தார்கள். அவர்களிடம் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அப்போது நீங்கள் எதைக் கேட்டீர்கள்? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், இறைவன் மீது ஆணையாக! நாங்கள் ஒட்டகத்தைக் கேட்கவில்லை. நாங்கள் குதிரையைக் கேட்கவில்லை.

மாறாக, நாங்கள் வெறுங்காலுடன் இருக்கின்றோம். கால்களில் காலணிகள் கிடையாது. மேலும் இந்த நீண்ட பயணத்தை நடந்து எங்களால் செல்ல முடியாது. கால்கள் காயமடைந்து விடும். பிறகு எங்களால் போர் செய்ய முடியாது. எங்களுக்குக் காலணிகளின் ஒரு ஜோடி கிடைத்தால் போதும். நாங்கள் அந்த காலணிகளை அணிந்து ஓடியவாறு எங்களது சகோதரர்களுடன் இணைந்து இந்தப் போரில் கலந்து கொள்வதற்காக சென்றடைந்து விடுவோம் என்றே கேட்டோம் என்று கூறினார்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 361)

இது அவர்களின் ஏழ்மையின் நிலையாக இருந்தது. இந்த உணர்வே அவர்களிடம் காணப்பட்டது. ஹஸ்ரத் சாலிம் பின் உமைர் அவர்கள் ஹஸ்ரத் முஆவிய்யா அவர்களின் காலகட்டம் வரை உயிருடன் இருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 387 சாலிம் பின் உமைர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சுராக்க பின் கஅப் (ரலி) ஆவார்கள். அன்னார் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர். அன்னாரின் தாயார் பெயர் உமைரா பின்த் நுஃமான் ஆகும். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். முஆவிய்யா அவர்களின் காலத்தில் அன்னார் மரணமடைந்தார்கள். மேலும் கல்பியின் அறிவிப்பிற்கேற்ப அன்னார் யமாமா போரில் ஷஹீதானார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 371 சுராக்கா பின் கஅப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 412 சுராக்கா பின் கஅப் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சாயிப் பின் மஸ்வூன் (ரலி) ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூனின் உடன் பிறந்த சகோதரர் ஆவார். அன்னார் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்த ஆரம்ப முஹாஜிரீன்களில் ஒருவர் ஆவார். பத்ர் போரில் பங்கு பெறும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 399 சாயிப் பின் மஸ்வூன் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பவாத் போருக்காக பெருமானார் (ஸல்) அவர்கள் சென்றபோது தமக்குப் பின்னால் ஹஸ்ரத் சதுஅ பின் மஆஸ் அவர்களை அமீராக

நியமித்தார்கள் என்று சில அறிவிப்புகளிலும், சாயிப் பின் உஸ்மான் அவர்களை தமக்குப் பின்னால் அமீராக நியமித்தார்கள் என்று சில அறிவிப்புகளிலும் வந்துள்ளது. ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் சாயிப் பின் மஸ்ஊன் பெயரும் வந்துள்ளது.

(அஸீரத்துல் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 174 பாப் ஸிக்ர் கஸ்வா பவாத் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சாயிப் அவர்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்களுடன் வியாபாரம் செய்வதற்கான கண்ணியமும் கிடைத்துள்ளது. சுனன் அபீ தாவூதின் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் சாயிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தேன். அப்போது சில சஹாபாக்கள் அன்னாருக்கு முன் என்னைப் புகழ்ந்து கூற ஆரம்பித்தனர். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், நான் உங்கள் அனைவரை விடவும் இவரை நன்றாக அறிந்தவனாக இருக்கின்றேன் என்று கூறினார்கள்.

அதற்கு நான் எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டும். தாங்கள் உண்மையை உரைத்தீர்கள். நீங்கள் வியாபாரத்தில் என்னுடன் இருந்தீர்கள். ஒன்றாக இருப்பதில் எவ்வளவு சிறந்தவராக நீங்கள் இருந்தீர்கள். நீங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியதும் கிடையாது. சண்டையிட்டதும் கிடையாது என்று கூறினேன்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் அதப், ஹதிஸ் எண் 4836)

சீரத் காத்தமுன் நபிய்யீனில் இந்த சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மக்காவிலுள்ள வணிகக் குழு பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வந்தனர். தெற்கில் யமனிற்கும், வடக்கில் சிரியாவிற்கும் தொடர்ச்சியாக வணிகக் குழு சென்று வந்து கொண்டிருந்தது. இது மட்டுமின்றி பஹ்ரைனுடனும் வியாபரம் நடைபெற்று வந்தது. பொதுவாக இந்த அனைத்து நாடுகளுக்கும் பெருமானார் (ஸல்) அவர்கள் வியாபார நோக்கத்திற்காக சென்றார்கள். மேலும் ஒவ்வொரு முறையும் சிறந்த முறையிலும், அமானிதத்தை பாதுகாப்பதிலும், மிகவும் மகிழ்ச்சிகரமாகவும் இந்த கடமையை அன்னார் நிறைவேற்றினார்கள். மக்காவில் எந்த மக்களுடன் அன்னார் வியாபாரத் தொடர்பை வைத்திருந்தார்களோ அவர்களுடைய நாவும் அன்னாரைப் புகழ்ந்தே கூறி வந்தன.

எனவே நான் எடுத்துக் கூறி வருகின்ற சாயிப் என்ற இந்த சஹாபி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது சில மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னிலையில் அவர்களைப் பற்றி புகழ்ந்து கூறினர். அதற்கு அன்னார், நான் உங்கள் அனைவரை விடவும் இவரை நன்றாக அறிந்தவனாக இருக்கின்றேன் என்று கூறினார்கள். சாயிப் அவர்கள், ஆமாம்! யா ரஸூலல்லாஹ்! உங்கள் மீது எனது தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டும். தாங்கள் ஒரு முறை என்னுடன் வியாபாரத்தில் ஒன்றாக இருந்தீர்கள். தாங்கள் எப்போதும் தங்களது விஷயத்தை மிகச் சிறந்ததாகவே வைத்திருந்தீர்கள் என்று கூறினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 106)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஆஸிம் பின் கைஸ் ஆவார்கள். அன்ஸாரிகளின் சஃலபா பின் அம்ர் கோத்திரத்தைச் சார்ந்தவர். பத்ர், உஹது போர்களில் அன்னார் பங்கு பெற்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 112,113 ஆஸிம் பின் கைஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் துஃபைல் பின் மாலிக் ஹன்ஸா (ரலி) ஆவார்கள். ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ உபைது பின் அதீயைச் சார்ந்தவர். அன்னாரின் தாயாரின் பெயர் அஸ்மா பின்த் அல்கைன் ஆகும். அன்னார் பைஅத்தே உக்பா, பத்ர் மற்றும் உஹது போர்களில் பங்கு பெற்றுள்ளார்கள். அதாம் பின்த் குர்துடன் அன்னாருடைய திருமணம் நடந்தது. இவர்கள் மூலமாக அன்னாருக்கு அப்துல்லாஹ் மற்றும் ரபீஃ என்ற இரண்டு மகன்கள் பிறந்தனர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 430,431 துஃபல் பின் மாலிக் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 79 துஃபைல் பின் மாலிக் பின் ஹன்ஸா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் துஃபைல் பின் நுஃமான் (ரலி) ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர். ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ்வின் பெரியன்னையான ஹன்ஸா பின்த் ரியாப் அன்னாரின் தாயார் ஆவார்கள். ஹஸ்ரத் துஃபைல் அவர்களின் மகளின் பெயர் ரபிய்யா ஆகும். பைஅத்தே உக்பா மற்றும் பத்ர் போரில் அன்னார் கலந்து கொண்டார்கள். உஹது போரிலும் கலந்து கொண்டார்கள். அன்றைய தினம் அன்னாருக்கு 13 காயங்கள் ஏற்பட்டன. அன்னார் அகழ் போரிலும் பங்கு பெற்றுள்ளார்கள். அந்த போரில் அன்னார் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள். வஹஷி பின் ஹரப் அன்னாரை ஷஹீதாக்கினார். பின்நாட்களில் அவர் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டார்.

வஹஷி கூறி வந்தார்கள்: அல்லாஹ் ஹஸ்ரத் ஹம்ஸா மற்றும் ஹஸ்ரத் துஃபைல் பின் நுஃமான் ஆகியோருக்கு என் கைகள் மூலமாக கண்ணியம் வழங்கியுள்ளான். ஆனால் என்னை அவர்களது கைகளால் இழிவுபடுத்தவில்லை. அதாவது நிராகரிப்பின் நிலையிலேயே நான் கொல்லப்படவில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 431 துஃபைல் பின் நுஃமான் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 79,80 துஃபைல் பின் மாலிக், துஃபைல் பின் நுஃமான் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸஹ்ஹாக் பின் அப்தே அமர் (ரலி) ஆவார்கள். தீனார் பின் நஜ்ஜாரைச் சேர்ந்தவர். அன்னாரின் தந்தையின் பெயர் அப்தே அம்ர் ஆகும். தாயாரின் பெயர் சமீரா பின்த் கைஸ் ஆகும். அன்னாரும் அன்னாருடைய சகோதரருமான ஹஸ்ரத் நுஃமான் பின் அப்தே அம்ர் பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நுஃமான் உஹது போரில் ஷஹாதத் அந்தஸ்தை பெற்றார்கள். அன்னாரது மூன்றாவது சகோதரரான உத்பா பின் அப்தே அம்ர் பிஃரே மவூனா நாளன்று ஷஹீதானார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 394 ஸஹ்ஹாக் பின் அப்தே உமர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸாக் பின் ஹாரிஸா ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். அன்னாரின் தந்தையின் பெயர் ஹாரிஸா ஆகும். தாயாரின் பெயர் ஹிந்த் பின்த் மாலிக் ஆகும். அன்னார் 70 அன்ஸார்களுடன் பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். அன்னார் பத்ர் போரிலும் கலந்து

கொண்டார்கள். அன்னாரது மகனின் பெயர் யஸீது ஆகும். அவர்களது மகன் அன்னாரது மனைவியான இமாமா பின்த் முஅர்ரிஸின் வயிற்றில் பிறந்தார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 433 ஸஹ்ஹாக் பின் ஹாரிஸா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 46 ஸஹ்ஹாக் பின் ஹாரிஸா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் கல்லாது பின் சவைது அன்ஸாரி (ரலி) ஆவார்கள். ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஹாரிஸைச் சேர்ந்தவர். அன்னாரது தாயாரின் பெயர் அம்ர் பின்த் சஅது ஆகும். அன்னாரது மகன் ஹஸ்ரத் சாயிப் அவர்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்களின் நெருக்கத்தில் இருப்பதற்கான நற்பேறு கிடைத்தது. மேலும் பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் அவர்களை யமன் நாட்டிற்கு பொறுப்பாளராக நியமித்தார்கள். இரண்டாவது மகனின் பெயர் ஹகம் பின் கல்லாது ஆகும். இந்த இருவரின் தாயாரின் பெயர் லைலா பின்த் இபாதா ஆகும். ஹஸ்ரத் கல்லாத் அவர்கள் பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். பத்ர், உஹது மற்றும் அகழ் போர்களிலும் கலந்து கொண்டார்கள்.

பனூ குரைழா போரின்போது புனானா என்ற ஒரு யூத பெண் அன்னாரது தலையில் மேலிருந்து ஒரு பெரிய கல்லை எறிந்தாள். எனவே அன்னாரது தலை உடைந்தது. மேலும் அன்னார் ஷஹீதானார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், கல்லாதிற்கு இரண்டு ஷஹீதுகளுக்குரிய நற்கூலி கிடைக்கும் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்குப் பிறகு அந்த பெண்ணையும் கொலைக்குப் பதிலாக கொலை என்பதன் அடிப்படையில் கொலை செய்து விட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 401,402 கல்லாது பின் சவைது (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீனில் இந்த சம்பவம் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது சில முஸ்லிம் இளைஞர்கள் கோட்டையின் கதவருகே சிறிது ஓய்வெடுப்பதற்காக அமர்ந்திருந்தார்கள். அவர்கள் மீது புனானா என்ற ஒரு யூதப் பெண் கோட்டையின் மேலிலிருந்து ஒரு பெரிய கல்லை எறிந்து கல்லாது என்ற பெயருடைய ஒரு மனிதரை ஷஹீதாக்கினாள். பிற முஸ்லிம்கள் தப்பித்து விட்டனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 598)

மேலும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் கல்லாது அவர்களின் தாயாருக்கு அன்னாரது ஷஹாதத்தின் தகவல் கொடுக்கப்பட்டதும் அவர்கள் முகத்தை மறைத்தவாறு வந்தார்கள். அவர்களிடம் கல்லாது ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள். நீங்கள் முகத்தை மூடியவாறு வந்துள்ளீர்கள் என்று கூறப்பட்டது. அதற்கு அவர்கள், கல்லாது என்னை விட்டு பிரிந்து விட்டார்தான். ஆனால் நான் எனது வெட்கத்தை என்னை விட்டு பிரிந்து செல்ல விட மாட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் கல்லாதின் ஷஹாதத் பற்றிய விவரம் இவ்வாறும் வருகிறது. ஹஸ்ரத் கல்லாத் அவர்கள் ஷஹீதானபோது பெருமானார் (ஸல்) அவர்கள், இவருக்கு இரண்டு ஷஹீதுகளுக்குரிய நற்கூலி கிடைக்கும் என்று கூறியதாக முன்னர் கூறப்பட்டது. மேலும் அதிகப்படியாக இதில் உள்ள விஷயம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஏன் அவ்வாறு இரண்டு ஷஹீதுகளுக்குரிய நற்கூலி கிடைக்கும் என்று கேட்கப்பட்டபோது அன்னார் வேதத்தையுடையவர் இவரை ஷஹீதாக்கியுள்ளார் என்று கூறினார்கள் என்று வருகிறது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 402 ஹல்லாத் பின் சவைது (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அன்ஸாரி (ரலி) ஆவார்கள். அபூ லைலா அன்னாரது சுட்டுப் பெயர். அன்ஸார்களின் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ சாலிம் பின் கனம் பின் அவ்ஃபச் சார்ந்தவர். அன்னாரது தாயார் பெயர் ஜமீலா பின்த் அபீ ஆகும். இவர்கள் அப்தில்லாஹ் பின் அபீ சலூல் அவர்களின் சகோதரி ஆவார்கள். இவர்களது மகளின் பெயர் கஷம் ஆகும். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாருக்கும், ஷுஜ்ஜாஃ பின் வஹப் அல்அஸதிக்கும் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் அவ்ஸ் அவர்கள் காமிலீனைச் சார்ந்தவர் ஆவார்கள். காமிலீன் என்பவர் யார் என்றால், அரபி எழுதத் தெரிந்தவர், அம்பு எய்யும் திறன் கொண்டவர், நீச்சல் தெரிந்தவர். இந்த மூன்று விஷயங்களும் எவரிடம் இருக்குமோ அவர் காமில் என்று அழைக்கப்பட்டார். இந்த அனைத்து விஷயங்களும் ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அவர்களிடம் இருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 409,410 அவ்ஸ் பின் ஹவ்லி (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 320 அவ்ஸ் பின் ஹவ்லி (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நாஜியா பின் அஃஜிம் அறிவிக்கின்றார்கள்: ஹுதைபிய்யாவின்போது பெருமானார் (ஸல்) அவர்களிடம் தண்ணீர் பஞ்சத்திற்கான முறையீடு செய்யப்பட்டபோது அவர்கள் என்னை அழைத்து ஒரு அம்பை என்னிடம் கொடுத்தார்கள். பிறகு கிணற்றின் தண்ணீரை ஒரு குவளையில் வரவழைத்தார்கள். நான் அதைக் கொண்டு வந்தேன். அன்னார் வுளு செய்தார்கள். பிறகு தமது உமிழ்நீரை அதில் இட்டார்கள். முஸ்லிம்களிடம் ஒரே ஒரு கிணறு மட்டுமே இருந்தது. ஏனென்றால் இணை வைப்பவர்கள் பல்தா என்ற இடத்தை விரைவாக சென்றடைந்து அங்குள்ள தண்ணீர் மற்றும் பொருட்களை அபகரித்து விட்டனர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த குவளையை கிணற்றில் போடுங்கள். மேலும் எவருடைய தண்ணீர் வரண்டு விட்டதோ அவருடைய தண்ணீரில் அம்பை நட்டுங்கள் என்று கூறினார்கள். நானும் அவ்வாறு செய்தேன். அன்னாரை உண்மையுடன் அனுப்பிய அந்த இருப்பின் மீது ஆணையாக! நான் மிகவும் சிரமத்துடன் வெளியே வந்தேன்.

அதாவது உடனேயே அங்கு தண்ணீர் பீறிட்டு வெளிவர ஆரம்பித்தது. என்னை தண்ணீர் நாலாபுறமும் சூழ்ந்து கொண்டது. எதுவரை என்றால் தண்ணீர் மேலே வர ஆரம்பித்தது. ஓரம் வரை தண்ணீர் சமமாக வந்து விட்டது. மக்கள் அந்த ஓரத்திலிருந்து தண்ணீர் நிறைத்தார்கள். எதுவரைஎன்றால் கடைசி நபரும் கூட தனது தாகத்தை தணித்தார்.

அந்த நாளில் நயவஞ்சகர்களின் ஒரு கூட்டம் அங்கிருந்தது. அதில் ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அவர்களின் மாமாவான அப்தில்லாஹ் பின் அபீயும் இருந்தார்கள். ஹஸ்ரத் அவ்ஸ் அவர்கள்

அவர்களிடம், அபூ ஹப்பாபே! உன் மீது அழிவு உண்டாவதாக. இப்போதாவது நீ இந்த அற்புதத்தை ஏற்றுக் கொள். பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்தை ஏற்றுக் கொள். இதற்குப் பிறகும் ஏதும் எஞ்சியுள்ளதா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் இதைப்போன்ற பலவற்றை நான் பார்த்துள்ளேன் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அவர்கள், அல்லாஹ் உனது வழியை தவறானதென்று நிரூபிப்பானாக. உமக்கு தீங்கு செய்வானாக என்று கூறினார்கள். அப்துல்லாஹ் பின் அபீ பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இவர் கூறிய தகவல் கிடைத்தது. எனவே அவரிடம் அன்னார், அபூ ஹப்பாபே! இன்று நீர் பார்த்தது போன்று இதற்கு முன்பு எப்போது பார்த்தாய்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், இதற்கு முன்பு ஒருபோதும் நான் பார்த்ததில்லை. அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், பிறகு ஏன் உமது மருமகனிடம் அந்த கூற்றை நீர் கூறினீர்? என்று கேட்டார்கள். அதற்கு அப்தில்லாஹ் பின் அபீ அவர்கள், அஸ்தக்ஃபிருல்லாஹ் என்று கூறினார்.

அப்தில்லாஹ் பின் அபீயின் மகனான ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் அப்துல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலுல்லாஹ்! இவரது மஃபிரத்திற்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும் அவரது மஃபிரத்திற்காக துஆ செய்தார்கள்.

(சபலுல் ஹுதா தொகுதி 5 பக்கம் 41 பாப் ஃபீ கஸ்வா ஹுதைபிய்யா (ரலி) – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அம்தாவுல் அஸ்மா தொகுதி 1 பக்கம் 284 பாப் மகாலத்துல் முனாஃபிகீன் ஃபீ தலீலுன் நுபுவ்வத் – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி பின் அப்தில்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் உம்ரா செய்வதற்காக மக்கா செல்ல எண்ணினார்கள். அன்னார் அவ்ஸ் பின் ஹவ்லி மற்றும் அபூ ராஃபிஃ ஆகியோரிடம், ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களிடம் ஹஸ்ரத் மைமூனாவின் திருமணத்தை தன்னுடன் செய்து வைக்குமாறு தூதுச் செய்தியை அனுப்பினார்கள். வழியில் இந்த இருவரது ஒட்டகமும் தொலைந்து விட்டது. பிறகு சில நாட்கள் வரை அவர்கள் ஜஹ்ஃபாவிலிருந்து பத்து மைல் தொலைவிலுள்ள ராபிக் என்ற இடத்தில் தங்கினார்கள். எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள்.

பிறகு இவ்விருவருக்கும் அவர்களது ஒட்டகம் கிடைத்து விட்டது. பிறகு இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஒன்றாக மக்காவிற்குச் சென்றார்கள். அன்னார் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களுக்கு தூதுச் செய்தி அனுப்பினார்கள். ஹஸ்ரத் மைமூனா தமது விவகாரத்தை ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களிடம் சென்றார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களின் திருமணத்தை செய்து வைத்தார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 4 பக்கம் 423 மைமூனா உம்முல் முஃமினீன் (ரலி) – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 12 ஸேரே லஃப் ராபிஃ (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அவர்கள் ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிபிடம், நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். எங்களையும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தொண்டு செய்வதில் இணைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அலி அவர்கள் அதற்கு அனுமதி வழங்கினார்கள்.

இது தொடர்பான இன்னொரு அறிவிப்பு இவ்வாறு வருகிறது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது அன்னாரைக் குளிப்பாட்ட முடிவு செய்யப்பட்டது. அப்போது அன்ஸாரைச் சேர்ந்தவர்கள், அல்லாஹ்! அல்லாஹ்! நாங்கள் அன்னாரது தாய் வழியைச் சேர்ந்தவர்களாக ஆக இருக்கின்றோம். எனவே எங்களில் ஒருவரும் இதில் கலந்து கொள்ள வேண்டும் என்று கூறினர். எனவே அன்ஸார்களிடம், நீங்கள் உங்களில் ஒருவரை நியமியுங்கள் என்று கூறப்பட்டது. அதற்கு அவர்கள் ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அவர்களை தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் உள்ளே வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களை குளிப்பாட்டுவதிலும், அடக்கம் செய்வதிலும் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அவ்ஸ் அவர்கள் வலுவான மனிதராக திகழ்ந்தார்கள். எனவே அவர்கள் தண்ணீரை தமது கைகளால் எடுத்துக் கொண்டு வந்தார்கள். இவ்வாறு தண்ணீருக்கான ஏற்பாட்டைச் செய்து வந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 320 அவ்ஸ் பின் ஹவ்லி (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸாப தொகுதி 1 பக்கம் 299 அவ்ஸ் பின் ஹவ்லி – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் ஃபஸல் பின் அப்பாஸ், அவர்களது சகோதரர் கஷம், பெருமானார் (ஸல்) அவர்களது விடுதலை செய்யப்பட்ட அடிமை ஷுக்ரான் மற்றும் ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களது புனித உடலை கபரில் வைப்பதற்காக இறங்கினார்கள்.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுல் ஜனாயிஸ், பாப் ஸிக்ர் வஃபாத் வ தஃப்னா ஹதீஸ் எண் 1628)

ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், அவ்ஸே! எவர் அல்லாஹ்விற்காக பணிவையும், தாழ்மை குணத்தையும் மேற்கொள்வாரோ அல்லாஹ் அவருடைய அந்தஸ்த்தை உயர்த்துவான். மேலும் எவர் ஆணவம் கொள்வாரோ அல்லாஹ் அவரை இழிவுபடுத்துவான் என்று கூறினார்கள்.

(மஃரூஃபத்துஸ் சஹாபா லாபீ நயீம் தொகுதி 1 பக்கம் 279 ஹதீஸ் எண் 975 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எனவே இது மிக முக்கியமான பாடமாகும். இதனை நாம் எப்போதும் நினைவில் வைக்க வேண்டும்.

அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் மதீனாவில் மரணமடைந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 321 அவ்ஸ் பின் ஹவ்லி (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் இந்த அனைத்து சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

# ஜுமுஆ பேருரை

**ரஸூல்மார்கள் மற்றும் நபிமார்கள் மீது சூனியத்திற்கான ஏதாவது தாக்கம் ஏற்படுவது என்பது அவர்களது கண்ணியத்திற்கு பங்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்**

**அடிமையின் அந்தஸ்து இவ்வாறிருக்கும்போது எஜமானர் மீது ஒரு யூதனின் ஹெப்னாடிஸத்திற்கு அன்னார் இலக்காகி விட்டார்கள் (நவூதுபில்லாஹ்) என்று கூறுவதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?**

**திருக்குர்ஆன் நபிமார்கள் மீது சூனியம் வைக்கப்பட்டது என்ற கட்டுக்கதையை தூரத்திலிருந்தே எட்டி உதைக்கின்றது. அதனை மறுக்கின்றது. மனித சிந்தனை இதனை ஏற்றுக் கொள்வதை நிராகரிக்கின்றது. சூனியம் தொடர்பாக உயர் அந்தஸ்தைப் பெற்ற நபியின் மீது இட்டுக்கட்டப்படுகின்ற கதையை நபிமொழியின் சொற்கள் பொய்ப்படுத்துகின்றது**

**கண்களை மூடிக் கொண்டு புகாரி மற்றும் முஸ்லிம் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டே செல்வது நமது கோட்பாடுகளுக்கு மாற்றமானதாகும்**

**எந்த நபிமொழி திருக்குர்ஆனுக்கு மாற்றமாக இருக்குமோ, பெருமானார் (ஸல்) அவர்களின் மகத்துவத்திற்கு மாற்றமாக இருக்குமோ அதனை நம்மால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?**

**எந்த நபிமொழி திருக்குர்ஆன் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் கண்ணியத்துடன் மோதுகின்றதோ அது நிராகரிக்கப்படுவதற்குத் தகுதியானதாகும். அல்லது அதற்கு வேறு ஏதாவது விளக்கம் இருக்கும்**

**எந்த தூதர் (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களும் ஷய்த்தானிடமிருந்து தூய்மையானவர்கள் என்று கருதி வந்தார்களோ அந்த நபியின் கண்ணியத்தின் மீது இத்தகைய சொற்களை கூறுகின்ற இம்மக்களுக்கு என்னவாயிற்று என்று தெரியவில்லை**

**நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்தை புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும், அடையாளங்கண்டு கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.**

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஏதாவது சூனியத்திற்கான தாக்கம் ஏற்பட்டதா?**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய இருப்பின் மீது யூதர்கள் தரப்பிலிருந்து சூனியம் வைக்கப்பட்டதாக கூறப்படுகின்ற சம்பவத்தின் உண்மை நிலை**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 08 மார்ச் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **08 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் கைஸ் பின் மிஹ்ஸன் அன்ஸாரி சஹாபி ஆவார்கள். சில அறிவிப்புகளின் அன்னாரது பெயர் கைஸ் பின் ஹிஸ்ன் என்றும் வந்துள்ளது. அன்னார் அன்ஸார்களின் பனூ ஸுரைக்கைச் சேர்ந்தவர்கள். அன்னாரது தாயாரின் பெயர் அனீஸா பின்த் கைஸ் ஆகும். தந்தையின் பெயர் நிஸ்ம் பின் காலித் ஆகும். பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். உம்மே சஅது பின்த் கைஸ் அன்னாரது ஒரு மகள் ஆவார்கள். அன்னார் மரணமடைந்தபோது அவர்களது குழந்தைகள் மதீனாவில் இருந்தனர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 443 கைஸ் பின் மிஹ்ஸன் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 422 கைஸ் பின் மிஹ்ஸன் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஜுபைர் பின் இயாஸ் ஆவார்கள். அன்னாரது தந்தையின் பெயர் இயாஸ் பின் காலித் ஆகும். பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். அன்னார் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஸுரைக்கைச் சேர்ந்தவர்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் முஹம்மது அவர்கள் அன்னாரது பெயரை ஜுபைர் பின் இல்யாஸ் என்று கூறுகின்றார்கள். இன்னொரு அறிவிப்பில் அன்னாரது பெயர் ஜுபைர் பின் இயாஸ் என்றும் கூறப்பட்டுள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 444 ஜுபைர் பின் இயாஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

நபிமொழிகளில் வருகிறது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஒரு யூதன் சூனியம் செய்து விட்டான். மேலும் அதன் தாக்கம் அன்னார் மீது ஏற்பட்டது. நவூதுபில்லாஹ்.

மேலும் அறிவிப்புகளில் வருகிறது. அதாவது அந்த யூதன் சீப்பு மற்றும் தலை முடியின் மீது சூனியம் செய்து அர்வான் என்ற கிணற்றில் போட்டு விட்டான். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் பிறகு அங்கு சென்று அதனை வெளியே எடுத்தார்கள்.

சஹீஹ் புகாரியின் விளக்க உரை ஃபதஹுல் பாரியில் இவ்வாறு வந்துள்ளது. அதாவது அந்த சீப்பையும், முடியையும் ஹஸ்ரத் ஜுபைர் பின் இயாஸ் அவர்கள் அந்த கிணற்றிலிருந்து வெளியே எடுத்தார்கள் என்றும் வேறொரு அறிவிப்பின் அடிப்படையில்,

ஹஸ்ரத் கைஸ் பின் முஹ்ஸின் வெளியே எடுத்தார்கள் என்றும் வந்துள்ளது.

(ஃபதஹுல் பாரி ஹதீஸ் எண் 5763 தொகுதி 10 பக்கம் 282)

எனவே நான் இந்த இரண்டு சஹாபாக்களின் நற்குறிப்பை ஒன்று சேர்த்துள்ளேன்.

இவர்களில் எவர் இதனை வெளியில் எடுத்திருந்தாலும் அது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது கிடையாது. அசல் விஷயம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சூனியத்திற்கான தாக்கம் ஏற்பட்டதா? இதன் உண்மைத்துவம் என்ன? இந்த விவகாரம் தொடர்பாக நமது பார்வை என்ன? என்பதேயாகும்.

இதனைப் பற்றி நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது எந்த விஷயம் தொடர்பாக குற்றம் சுமத்த முடியுமோ அல்லது மக்கள் குற்றம் சாட்டுகின்றனரோ அதற்கு நாம் பதில் கொடுக்க வேண்டும். எனவே ஜமாஅத்தின் நூல்களிலுள்ள இதன் சில விளக்கத்தை நான் எடுத்துக் கூறுவேன். இந்த இரண்டு சஹாபாக்கள் தொடர்பாக இன்று எடுத்துக் கூறப்படும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா ஃபலகிற்கு விளக்கமளித்தவாறு இந்த சம்பத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்: சூரா ஃபலக் மற்றும் சூரா நாஸ் ஆகிய இரு அதிகாரங்கள் மக்காவில் அருளப்பட்டது என்று சிலர் கருதுகின்றனர். மேலும் சிலர் இதனை மத்னீ சூரத் என்றும் கூறுகின்றனர். அதாவது மதீனாவில் அருளப்பட்டது என்று கூறுகின்றனர்.

அன்னார் எழுதுகின்றார்கள்: எந்த மக்கள் இந்த அதிகாரம் மதீனாவில் அருளப்பட்டது என்று கூறுகின்றார்களோ அவர்கள் தருகின்ற ஆதாரம் என்னவென்றால், இந்த சூரா மற்றும் அதற்குப் பிறகுள்ள சூராக்களின் தொடர்பு பெருமானார் (ஸல்) அவர்கள் நோயுற்றிருந்த அந்த சம்பத்துடன் தொடர்புடையதாகும். அப்போது யூதர்கள் அன்னார் மீது சூனியம் வைத்தார்கள் என்று கருதப்பட்டது. அப்போதுதான் அந்த இரண்டு அதிகாரங்களும் அருளப்பட்டன. பெருமானார் (ஸல்) அவர்கள் இதனை ஓதி தம்மீது ஊதினார்கள்.

இவ்வாறு கூறப்படுகிறது என்று ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

மேலும் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர்: இந்த சம்பவம் மதீனாவில் நிகழ்ந்ததால் சூரா ஃபலக் மற்றும் சூரா நாஸ் மத்னீ ஆகும். அதாவது மதீனாவில் அருளப்பட்டதாகும்.

எவ்வாறிருப்பினும் இந்த இரண்டு அதிகாரங்களும் மதீனாவில் அருளப்பட்டது என்று முன்னுரிமை வழங்கப்படுகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் எழுதுகின்றார்கள்: இது விரிவுரையாளர்கள் எடுத்து வைக்கின்ற ஆதாரமாகும். வரலாற்று ஆதாரம் கிடையாது. நம்மிடத்திலும் கூட இது மக்காவில் அருளப்பட்ட அதிகாரமாகும் என்று நம்பத்தக்க வகையில் வலுவான ஆதாரமும் கிடையாது. ஆனால் எடுத்து வைக்கப்பட்டுள்ள ஆதாரங்களும் அடிப்படையற்ற ஆதாரங்களாகும். ஏனென்றால் இந்த அதிகாரம் மக்காவில் அருளப்பட்டிருந்தாலும் பெருமானார் (ஸல்) அவர்கள் அதனை ஓதி ஊதி இருப்பார்கள். ஆக வெறும் ஓதி ஊதியதால் மட்டும் இது மதீனாவில் அருளப்பட்டது என்று கருதுவது சரியானது அல்ல.

பெருமானார் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்படுவதும், அவர்கள் மீது யூதர்கள் சூனியம் வைத்து விட்டனர் என்று மக்கள் கருதுவதும் ஆகிய இந்த சம்பவங்கள் எந்த சொற்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளதோ அது இதுவாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதனை விளக்கியவாறு எழுதியுள்ளார்கள்.

அன்னார் எழுதுகின்றார்கள்: விரிவுரையாளர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கூற்றிற்கு முன்னுரிமை வழங்கியுள்ளார்கள். எனவே நாம் இந்த அறிவிப்பையே மொழிபெயர்ப்பு செய்வோம்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் மீது யூதர்கள் சூனியம் வைத்தனர். அதன் தாக்கம் எந்த அளவுக்கு ஏற்பட்டது என்றால், சில நேரங்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் தாம் செய்யாத பணிகளையும் செய்ததாக கருதினார்கள். ஒரு நாள் அல்லது ஓர் இரவு பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். மீண்டும் துஆ செய்தார்கள். மீண்டும் துஆ செய்தார்கள்.

பிறகு கூறினார்கள்: ஆயிஷாவே! அல்லாஹ்விடம் நான் எதை வேண்டினேனோ அதை அவன் எனக்கு வழங்கி விட்டான். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அதற்கு நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம் தாங்கள் எதைக் கேட்டீர்கள்? அவன் எதைக் கொடுத்தான்? எனக் கேட்டேன். அதற்கு அன்னார், என்னிடத்தில் இருவர் வந்தனர். அவர்களில் ஒருவர் என் தலைக்கு அருகில் அமர்ந்தார். இன்னொருவர் காலுக்கு அருகில் அமர்ந்தார். எனது தலைக்கு அருகில் அமர்ந்திருந்தவர் எனது காலுக்கு அருகில் அமர்ந்திருந்தவரிடம் அல்லது காலுக்கு அருகில் அமர்ந்திருப்பர் தலைக்கு அருகில் அமர்ந்திருப்பவரிடம், இந்த நபருக்கு அதாவது முஹம்மது (ஸல்) அவர்களுக்கு என்ன கஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று கேட்டார். அதற்கு மற்றொருவர், இவர் மீது சூனியம் வைக்கப்பட்டுள்ளது என்று பதில் கூறினார்.

அதற்கு அவர் யார் இவர் மீது சூனியம் வைத்தார் என்று கேட்டார். அதற்கு மற்றொருவர், லபீத் பின் ஆஸிம் என்ற யூதன் என்று கூறினார். அதற்கு முதலாவது நபர், எதன் மீது சூனியம் வைக்கப்பட்டுள்ளது? என்று கேட்டார். அதற்கு இரண்டாவது நபர் சீப்பு மற்றும் தலை முடியின் மீது வைக்கப்பட்டது என்று பதில் கூறினார். பிறகு முதலாவது நபர், இந்தப் பொருட்கள் எங்கே? என்று கேட்டார். அதற்கு இரண்டாவது நபர், அர்வான் கிணற்றில் உள்ளது என்று கூறினார்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களுடன் அந்த கிணற்றிற்கு சென்றார்கள். பிறகு திரும்பி வந்து கூறினார்கள்: ஆயிஷாவே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! கிணற்றின் தண்ணீர் மருதாணியைக் கலந்திருப்பதைப் போன்று சிவப்பாக தெரிந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து இதற்கு விளக்கம் எழுதியுள்ளார்கள். யூதர்களிடம் இந்த நடைமுறை இருந்தது. அதாவது அவர்கள் எவர் மீதாவது சூனியம் வைத்தால் பிறகு மருதாணி போன்ற பொருட்களை தண்ணீரில் கலந்து விடுவார்கள். இதனைக் கலப்பதன் மூலம் சூனியத்தின் மூலமாக தண்ணீர் சிவப்பாக ஆகிவிட்டது என்பதை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக இவ்வாறு செய்தார்கள். சாதாரண மக்களை தூண்டி விடுவதற்காக இவ்வாறு வெளிப்படையான திட்டங்களை தீட்டி வந்தனர்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அங்குள்ள பேரீச்சம் பழம் பாம்பின் தலையைப் போன்று இருக்கும். அதிலுள்ள பேரித்தம் பழத்தின் கிளைகள் பாம்பின் தலையுடன் ஒப்புமையாக கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அன்னாரிடம் யா ரஸூலல்லாஹ்! எந்தப் பொருளின் மீது சூனியம் செய்யப்பட்டதோ அதனை ஏன் எரிக்கவில்லை என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ் எனக்கு சுகத்தை வழங்கினான். எனவே நான் ஏதாவதொன்றைக் கூறி அதனால் தீங்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக நான் எதையும் கூற விரும்பவில்லை. எனவே நான் அந்தப் பொருட்களை புதைப்பதற்கு கட்டளையிட்டேன். எனவே அது புதைக்கப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: இந்த அறிவிப்பில் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்த இரண்டு ஆண்களைப் பற்றிய குறிப்பு உள்ளது.

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு காட்டப்பட்ட அவர்கள் வானவர்கள் ஆவர். அவர்கள் மனிதர்களாக இருந்திருப்பின் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கும் காட்சியளித்திருப்பார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மூலமாக கூறப்பட்டுள்ளவைகளின் பொருள் இவ்வளவு மட்டுமே ஆகும். அதாவது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் வானவர்களின் மூலமாக, யூதர்கள் அவர்கள் மீது சூனியம் வைத்தனர் என்ற செய்தியை தெரிவித்தான். சூனியத்தினால் எந்த தாக்கம் ஏற்படும் என்று கருதப்படுகிறதோ அவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சூனியத்தின் தாக்கம் ஏற்பட்டது என்பது இதன் பொருளல்ல.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: எவ்வாறிருப்பினும் பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த சூனியம் வைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட பொருட்களை வெளியே எடுத்து பூமியில் புதைத்து விட்டார்கள். இவ்வாறு யூதர்களும் அவர்கள் செய்த சூனியம் பொய்யானது என்றும், முடிவுற்று விட்டது என்றும் கருதினர். பிறகு அல்லாஹ் அன்னாருக்கு ஆரோக்கியத்தை வழங்கினான். ஆக சுருக்கம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சூனியம் வைத்து விட்டதாக யூதர்கள் நம்பினர். இதன் காரணமாக இயல்பாகவே பெருமானார் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட வேண்டும் என்பதன் பக்கம் அவர்களது கவனம் சென்றது.

அன்னார் எழுதுகின்றார்கள்: இந்த அறிவிப்புகளிலிருந்து எங்கு யூதர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கொண்டிருந்த பகைமை தெரிய வருகின்றதோ அங்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் உண்மை நபியாவார்கள் என்பதும் தெரிய வருகின்றது. ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்களுககு எதிராக யூதர்கள் செய்து இந்த அனைத்து விஷயங்கள் தொடர்பாகவும் அல்லாஹ் அன்னாருக்கு அறிவித்துக் கொடுத்தான். எனவே அன்னாருக்கு மறைவான விஷயங்கள் தெரிந்திருப்பது, யூதர்கள் தமது நோக்கத்தில் தோல்வியடைந்தது அன்னார் உண்மை நபி என்பதற்கு வெளிப்படையான மற்றும் வலுவான ஆதாரங்களாகும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 539–542)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எந்தத் தீர்வை கூறியுள்ளார்களோ அதுவே உண்மையாகும். அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சூனியம் வைத்ததாக யூதர்கள் எண்ணினர். ஆனால் அதனால் எந்தத் தாக்கமும் ஏற்படவில்லை. பிறகு நோய் மற்றும் மறதி அல்லது எந்த நோயாக இருந்தாலும் அதற்கு வேறு காரணம் இருக்கலாம். ஆனால் அல்லாஹ் யூதர்களின் இந்த நடவடிக்கையைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அறிவித்துக் கொடுத்ததன் மூலம் அவர்கள் வெளிப்படையாக நாம் சூனியம் வைத்து விட்டோம் என்று கருதியதையும் தோல்வியுறச் செய்தான். மேலும் அன்னாருக்கு ஏற்பட்ட நோயின் காரணமாக, யூதர்கள் தமது எண்ணத்தில் நமது சூனியமே தாக்கத்தை ஏற்படுத்தியது. அதனால்தான் அன்னார் நோயுற்றார்கள் என்ற எண்ணியதன் உண்மைத்துவமும் வெளிப்பட்டு விட்டது.

பிறகு நமது நூல்களில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் ஒரு கட்டுரை உள்ளது. அது இந்த சம்பவம் தொடர்பாக வரலாறு மற்றும் அறிவு ரீதியாக விரிவாக வாதித்துள்ளது.

அன்னார் எழுதுகின்றார்கள்: வரலாறு மற்றும் நபிமொழிகளில் எழுதப்பட்டுள்ளது என்னவென்றால், ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு நயவஞ்சகனான யூத சந்ததியைச் சார்ந்த லபீது பின் அஸிம் என்பவன் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சூனியம் வைத்து விட்டான். நவூதுபில்லாஹ். மேலும் இந்த சூனியம் எவ்வாறு செய்யப்பட்டது என்றால், ஒரு சீப்புடன் முடியை கட்டி அவற்றில் சிலவற்றை ஓதி அதனை கிணற்றில் போடப்பட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: அன்னார் இந்த சூனியத்தில் நீண்ட காலமாக சிக்கிக் கொண்டார்கள் என்று கூறப்படுகிறது. நவூதுபில்லாஹ். இவ்வாறு அவர்கள் பரப்பி இருந்தார்கள். அதாவது இந்த காலகட்டத்தில் அன்னார் பெரும்பான்மையான நேரங்கள் கவலையில் இருந்தார்கள். மேலும் பதற்றமடைந்தவாறு மீண்டும் மீண்டும் துஆ செய்து வந்தார்கள். மேலும் இந்த நிலைமைகளின் முக்கிய அம்சம் என்னவென்றால், அன்னாருக்கு இந்த நாட்களில் அதிகம் அதிகமாக மறதி ஏற்பட்டது. சில விஷயங்களை மறந்து விடுவார்கள். எதுவரை என்றால் சில நேரங்களில், நான் இந்தப் பணிகளை செய்து விட்டேன் என்று அன்னார் கருதினார்கள்.

ஆனால் உண்மையில் அந்தப் பணிகளை அன்னார் செய்திருக்க மாட்டார்கள். அல்லது சில நேரங்களில், நான் எனது இந்த இந்த மனைவிமார்களின் வீட்டிற்குச் சென்று வந்துள்ளேன் என்று அன்னார் கருதினார்கள். ஆனால் உண்மையில் அன்னார் இந்த வீடுகளுக்கு சென்றிருக்க மாட்டார்கள்.

இதற்கு விளக்கமளித்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: இது தொடர்பாக நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், இஸ்லாத்தின் கடமைகளுக்கேற்ப அன்னார் ஒவ்வொரு நாளும் மாலைப்பொழுதில் தமது மனைவிகளிடம் சென்று அவர்களிடம் நலம் விசாரித்து வந்தார்கள். இறுதியாக இன்று எந்த மனைவியிடம் செல்லவேண்டுமோ அந்த மனைவியின் வீட்டிற்குச் சென்று விடுவார்கள். இவ்வாறு அன்னார் நிர்ணயித்திருந்தார்கள். மேலும் இதுவே பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறையாக இருந்தது.

மேலே உள்ள அறிவிப்பும் இதனையே சுட்டிக் காட்டுகின்றது. இறுதியில் அல்லாஹ் ஒரு கனவின் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த குழப்பத்தின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்தினான். இந்த சுருக்கம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் விளக்கத்தின் அடிப்படையில் இதற்கு முன்னரும் எடுத்துக் கூறப்பட்டு விட்டது. இது புகாரியின் அறிவிப்பாகும். இதன் விளக்கத்தையே அன்னார் எடுத்துக் கூறினார்கள்.

பிறகு அன்னார் எழுதுகின்றார்கள்: இது வரலாறு, நபிமொழி மற்றும் சில நூல்களில் கூறப்பட்டுள்ள இந்த அறிவிப்பின் சுருக்கம் ஆகும். இந்த அறிவிப்போடு எப்படிப்பட்ட கதைகளின் வலையை புனைந்துள்ளார்கள் என்றால் உண்மையை தெரிந்து கொள்வது என்பது மிகக்கடினமாகி விட்டது.

அன்னார் எழுதுகின்றார்கள்: இந்த அனைத்து அறிவிப்புகளையும் ஏற்றுக் கொண்டால் பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய மற்றும் பரிசுத்த இருப்பானது, குறைமதி

கொண்ட, மிகவும் பலவீனமான மனிதர் என்று நிரூபணமாகும். நவூதுபில்லாஹ். இந்த விஷயத்தை குறைந்தது உலக விவகாரங்களில் அன்னார் மீது தவறான எண்ணம் கொண்டுள்ள எதிரி தமது சூனியத்தினால் நடந்தது என்று கூறலாம். பிறகு தமது அசுத்தமான எண்ணத்திற்கு அன்னாரை இலக்காக்க முயற்சித்தவாறு அன்னாரது உள்ளம் மற்றும் சிந்தனைகளில் அன்னார் இந்த சூனியத்திற்கு எதிரில் தம்மை ஒன்றும் செய்ய இயலாதவர்களாக கருதினார்கள் என்ற இந்த எண்ணத்தை பதிய முற்பட்டனர். நவூதுபில்லாஹ். ஆனால் அவ்வாறு நடைபெறுவது சாத்தியமற்றதாகும்.

ஆனால் இந்த அறிவிப்புகளை எடுத்துக் கூறப்பட்ட மற்றும் சரியான முறையிலும் ஆராய்ந்தால், இது ஒரு மறதியின் நோய் என்றே நிரூபணமாகும். அது சில நேரங்களில் தற்காலிகமாக கவலை கொள்வது மற்றும் உடல்ரீதியாக ஏற்படக்கூடிய பலவீனத்தின் காரணமாக அன்னாருக்கு சிறிது நேரத்திற்காக ஏற்பட்டது. இதிலிருந்து தீய எதிரி பயனடைந்தவாறு, நாங்கள் முஸ்லிம்களின் நபி மீது சூனியம் வைத்து விட்டோம் என்று பரப்பினர். நவூதுபில்லாஹ். ஆனால் அல்லாஹ் அன்னாருக்கு மிக விரைவில் ஆரோக்கியத்தை வழங்கி எதிரிகளின் முகத்தை கருப்பாக்கினான். மேலும் இவ்வாறு நயவஞ்சகர்களின் பொய்யான பிரச்சாரம் மண்ணோடு மண்ணாக்கப்பட்டது.

முழு உலகத்திலும் இருக்கின்ற ஷய்த்தானிய ஆற்றலை வெற்றி கொண்ட மகத்துவமிக்க வெற்றியாளரும், நபிமார்களில் சிறந்தவரும் ஆகிய அன்னாரைத் தவிர ஷய்த்தானிய சக்தியின் தலையை நசுக்கியவர் இன்று வரை எவரும் பிறந்ததும் கிடையாது. இனி பிறக்கக் போவதும் கிடையாது. இது தொடர்பாக ஒரு கீழ்த்தரமான யூதனின் ஷய்த்தானிய சூனியத்திற்கு அன்னார் ஆளாகி விட்டார்கள் என்று கருதுவது மனித சிந்தனையின் மிகவும் மோசமான ஒரு விஷயமாகும். இதை சிந்தித்துக் கூட பார்க்க முடியாது. மேலும் இது வெறும் நமது வாதம் மட்டுமல்ல. மாறாக, அகிலங்களுக்கும் தலைவராகியவர் இதனை வழிமொழிந்துள்ளார். இதன் விளக்கம் ஒரு நபிமொழியிலிருந்து கிடைக்கின்றது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ்! ஷய்த்தான் இருக்கின்றானா? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், ஆம் என்று கூறினார்கள். பிறகு ஆயிஷா அவர்கள், என்னுடன் ஷய்த்தான் இருக்கின்றானா? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், ஆம் என்று கூறினார்கள். பிறகு நான் அனைத்து மனிதர்களுடனும் ஷய்த்தான் இருக்கின்றானா? என்று கேட்டேன்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் ஆம் என் பதிலளித்தார்கள். பிறகு நான் வியப்படைந்தவாறு, யா ரஸூலல்லாஹ்! உங்களுடனும் ஷய்த்தான் இருக்கின்றானா? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் ஆம். ஆனால் இறைவன் ஷய்த்தான் மீது எனக்கு வெற்றியை வழங்கியுள்ளான். எதுவரை என்றால் என்னுடைய ஷய்த்தான் முஸ்லிமாகி விட்டான் என்று கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாப் சிஃபதுல் கியாமத்த வல் ஜன்னத்த வந்நார் தஹ்ரீஷ் ஷய்த்தான்)

இந்த வெளிப்படையான கூற்றிற்குப் பிறகும், திருக்குர்ஆனின் அடிப்படையில் வழிகெட்ட சமுதாயத்தைச் சார்ந்த யூத நயவஞ்சகன் தமது ஷய்த்தானின் உதவியுடன் பெருமானார் (ஸல்) அவர்களைப் போன்ற உயர் அந்தஸ்தை கொண்டவர் மீது சூனியம் வைத்து விட்டான் என்றும் அன்னார் இந்த ஷய்த்தானின் சூனியத்தினால் தாக்கத்திற்கு ஆளாகி நீண்ட காலமாக கவலையிலும் நோயுற்றும் இருந்தார்கள் என்றும் கருத முடியுமா? பொய்யர்கள் உண்மைக்கு எதிரில் ஒவ்வொரு காலத்திலும் இத்தகைய பொய்யான ஆயுதத்தைப் பயன்படுத்தி வந்துள்ளனர். ஆனால் வல்லமைமிக்க மற்றும் கண்ணியமிக்க இறைவன் இத்தகைய அனைத்து பொய்யையும் வெளிப்படுத்தக் காட்டி விடுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்: كَتَبَ اللّٰهُ لَاَغۡلِبَنَّ اَنَا وَ رُسُلِیۡ ؕ (58:22) அதாவது ஒவ்வொரு ரஸூலின் காலகட்டத்திலும் நானும் எனது ரஸூலும் வெற்றி பெற்றே தீருவோம். மேலும் எந்வொரு ஷய்த்தானிய தாக்குதலும் எம்முடன் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது என்று இறைவன் நிர்ணயித்து விட்டான்.

அன்னார் எழுதுகின்றார்கள்: பிறகு சஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் நாவினால் கூறப்பட்டுள்ள இந்த சம்பத்தின் உண்மை நிலை தான் என்ன? என்ற கேள்வி எழுகின்றது. எனவே சம்பவத்தின் தொடர்ச்சி மற்றும் யூதர்கள், நயவஞ்சகர்களின் வழிமுறை ஆகியவற்றை கருத்தில் கொண்டவாறு சிந்தித்துப் பார்த்தால் இந்த சம்பவத்தின் உண்மைத்தன்மையை புரிந்து கொள்வதில் கஷ்டம் இருக்காது.

முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது சூனியத்தின் இந்த சம்பவமானது ஹுதைபிய்யா உடன்படிக்கைகுப் பிறகு நடைபெற்றதாகும்.

தப்காத் இப்னு சஅதில் எழுதப்பட்டுள்ளது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு கனவின் அடிப்படையில் உம்ரா செய்வதற்கு மக்கா செல்ல முடிவெடுத்தார்கள். மேலும் அங்கு சென்றார்கள். ஆனால் வழியில் குரைஷிகள் தடுத்து நிறுத்தியதன் காரணத்தால் வெளிப்படையில் தோல்வியுடன் திரும்ப வேண்டியதாயிற்று. இந்த வெளிப்படையான தோல்வியானது எப்படிப்பட்ட வலுவான துக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்ததென்றால், காஃபிர்கள் மற்றும் நயவஞ்சகர்கள் எள்ளிநகையாடினர். ஏளனம் செய்தனர்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. சில கலப்பற்ற முஸ்லிம்கள் அதிலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற உயர் அந்தஸ்தைப் பெற்றவர்கள் இந்த வெளிப்படையான தோல்வியின் காரணத்தினால் தற்காலிகமாக பதற்றமடைந்தார்கள்.

புகாரியில் இதுவும் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் அவர்களின் இந்த நிலைமையினால் பலவீனமான மக்களின் சோதனைக்கு காரணமாகி விடும் என்ற அச்சத்தினால் பெருமானார் (ஸல்) அவர்களின் உடல் நலத்திலும் இயல்பாகவே மிகுதியாக இதன் தாக்கம் ஏற்பட்டது. அன்னார் சிறிது காலம் வரை மிகவும் கவலையில் இருந்தார்கள். இந்த கவலையின் தாக்கம் அன்னாரது உடல் நலத்திலும் ஏற்பட்டது. அன்னார் இந்த பதற்றத்தில் அல்லாஹ்விடம் அதிகம் அதிகமாக துஆவும் செய்து வந்தார்கள்.

ஹதிஸிலும் دَعَا وَدَعَا என்ற சொற்களில் சைகையாக இது பற்றி கூறப்பட்டுள்ளது. அதன் மூலம் ஹுதைபிய்யா உடன்படிக்கை சம்பவத்தின் காரணமாக இஸ்லாத்தின் முன்னேற்றத்தில் எவ்வித தற்காலிக தடையும் ஏற்பட்டு விடக்கூடாது. மேலும் இவ்வாறான துஆவையே அன்னார் பத்ர் களத்திலும் இறைவன் தரப்பிலிருந்து வெற்றிக்கான வாக்குறுதி வழங்கப்பட்ட பிறகும் எதிரிகளின் வெளிப்படையான ஆற்றலைக் கண்டு இவ்வாறு துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ اِنْ تَهْلِكْ هٰذِهِ الْعِصَابَةَ لَا تُعْبَدُ فِي الْاَرْضِ

இதன் காரணமாக அன்னாரது உடலிலும், அன்னாரது நினைவுத் திறனிலும் பெரும் தாக்கம் ஏற்பட்டது. அன்னாருக்கு சிறிது

காலம் மறதிக்கான நோய் ஏற்பட்டது. சில அறிவிப்புகளில் இந்த நோய் இரண்டு நான்கு நாட்கள் அல்லது இரண்டு நாட்கள் என்றும் அல்லது ஒரு நாள் மற்றும் ஒரு இரவு என்றும் வந்துள்ளது. ஆனால் எவ்வாறிருப்பினும் எத்தனை நாட்களாக இருந்தாலும் சிறிது தாக்கம் ஏற்பட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளார்கள். அதாவது சிறிது நாட்களுக்கு இருந்தது. அதற்கான காரணம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முஸ்லிம்களின் ஈமானில் பலவீனம் ஏற்பட்டதனால் வந்த கவலையாகும். இந்தக் கவலை இயற்கைதான். இதிலிருந்து இறைவனது நபிமார்களும் கூட விதிவிலக்கு கிடையாது.

பெருமானார் (ஸல்) அவர்கள் இன்றைய நாட்களில் நோய்வாய்ப்பட்டுள்ளார்கள். மேலும் அவர்களது உடல் பலவீனம் மற்றும் நினைவுத்திறனில் ஏற்பட்ட பலவீனத்தினால் அன்னாருக்கு மறதிக்கான நோய் ஏற்பட்டுள்ளது என்பதைப் பார்த்த யூதர்களும் நயவஞ்சகர்களும் தமது இயல்பிற்கேற்ப குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, நாங்கள் முஸ்லிம்களின் நபி மீது சூனியம் வைத்து விட்டோம்.

மேலும் அன்னாருக்கு ஏற்பட்ட மறதி சூனியத்தின் விளைவேயாகும் என்று பரப்ப ஆரம்பித்தனர். மேலும் அவர்கள் தமது பழைய நடைமுறைக்கேற்ப வெளிப்படையான அடையாளமாக ஏதாவதொரு சீப்பில் தலை முடிகளை கட்டி அதை ஒரு கிணற்றினுள் போட்டு விட்டனர்.

சூனியம் வைத்து விட்டோம் என்ற இவர்களது இந்த கூற்று பெருமானார் (ஸல்) அவர்களை சென்றடைந்தபோது அன்னார் இந்து குழப்பத்தை முறியடிப்பதற்காக இறைவனிடம் துஆ செய்தார்கள். இதனையே ஹஸ்ரத் ஆயிஷா அவர்களும் குறிப்பிடுகின்றார்கள். அதாவது இந்த செய்தி கிடைத்ததுமே அன்னார் ஒரு நாள் அல்லது ஓர் இரவு மிகவும் உருக்கத்துடன் தமது விண்ணின் தலைவனிடம், இந்த பொய்யான விஷயத்தை முறியடிப்பதற்காக இந்த குழப்பத்தை ஏற்படுத்தியவனின் பெயர் மற்றும் இந்த சூனியத்தின் வழிமுறையை தமக்கு தெரிவிக்குமாறு துஆ செய்தார்கள். எனவே அன்னாரது உருக்கமான துஆவை அல்லாஹ் செவியேற்றான். மேலும் கனவு மூலமாக அன்னாருக்கு உண்மை விஷயத்தை வெளிப்படுத்திக் காட்டினான்.

திருக்குர்ஆனின் அடிப்படையான கூற்று وَلَا يُفْلِحُ السَّاحِرُ حَيْثُ اَتٰى **(20:70)** என்பதாகும். அதாவது நபிமார்களுக்கு எதிரில் எந்தவொரு சூனியக்காரரும் எந்த நிலையிலும் வெற்றி பெற முடியாது.

பிறகு திருக்குர்ஆனின் இந்த இறுதியான தீர்ப்பின் ஒளியில் அதாவது, اِذْ يَقُوْلُ الظّٰلِمُوْنَ اِنْ تَتَّبِعُوْنَ اِلَّا رَجُلًا مَّسْحُوْرًا **(17:48)** ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கும் ஒருவரைத்தான் நீங்கள் பின்பற்றுகிறீர்கள் என்று அநீதியிழைப்போர் கூறுகின்றனர்.

நிராகரிப்பாளர்களே இதைக் கூறினார்கள் என்று திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளது. பிறகு நபிமொழியின் இந்த சொற்கள் மேலும் எடுத்துக் கூறிய விதம் மற்றும் அரபுகளில் எடுத்துக் கூறப்படுகின்ற நடை ஆகியவற்றை சிந்தித்துப் பார்த்தால் பிறகு புகாரியின் அறிவிப்பானது நிச்சயமாக உண்மைக்கு மாற்றமாகவே கூறப்பட்டுள்ளதாக புரிந்து கொள்ள முடிகிறது. அதாவது வெளிப்படையான இதற்குரிய பொருள் என்னவென்றால், பேசக்கூடியவர் தன் தரப்பிலிருந்து பேசுகின்றார்.

ஆனால் உண்மையில் அதன் நோக்கம் என்னவாக இருக்கின்றதென்றால், மற்றவர் இதைக் கூறுகின்றனர். மற்றவரது கூற்று எடுத்துக் கூறப்படுகிறது என்பதேயாகும். இவ்வாறு இந்த அறிவிப்பின் மொழியாக்கம் இவ்வாறு அமைகின்றது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சூனியம் வைக்கப்பட்டது. அதாவது எதிரிகள் அன்னார் மீது சூனியம் வைக்கப்பட்டதாக பரப்பினர். ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் சுயமே இதைக் கூறவில்லை.

இதன் மொழியாக்கம் இவ்வாறு அமையும். அதாவது அன்னார் மீது சூனியம் வைக்கப்பட்டது என்று எதிரிகள்தான் பரப்பினர். எதுவரை என்றால் இந்த நாட்களில் அன்னார் சில நேரங்களில் தாம் இந்த பணியைச் செய்து விட்டதாக கருதினார்கள். ஆனால் உண்மையில் செய்திருக்கமாட்டார்கள்.

மேலும் ஓர் அறிவிப்பில் வந்துள்ளது. அதாவது அன்னார் சில நேரங்களில் இந்த மனைவியின் வீட்டிற்குச் சென்று வந்துள்ளேன் என்று கருதுவார்கள். ஆனால் அன்னார் அவர்களது வீட்டிற்குச் சென்றிருக்க மாட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் விளக்கத்திற்கேற்ப, இந்த நாட்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் என் வீட்டில் இருந்தார்கள். அன்னார் பதற்றத்தில் அல்லாஹ்விடம் மீண்டும் மீண்டும் துஆ செய்தார்கள். இந்த துஆவிற்குப் பிறகு அன்னார் என்னிடம், ஆயிஷாவே! நான் அல்லாஹ்விடம் எதைப் பற்றிக் கேட்டேனோ அந்த விஷயத்தைப் பற்றி அல்லாஹ் எனக்கு தெரிவித்து விட்டான் என்று கூறினார்கள். அதற்கு நான், யா ரஸூலல்லாஹ்! அது என்ன விஷயம்? என்று கேட்டேன்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கனவில் அல்லது கஷ்ஃபில் என்னிடத்தில் இரண்டு மனிதர்கள் வந்தனர். அவர்களில் ஒருவர் எனது தலைக்கு அருகில் அமர்ந்து விட்டார். மற்றொருவர் காலுக்கு அருகில் அமர்ந்து விட்டார். பிறகு இவர்களில் ஒருவர் மற்றொருவரிடம், இந்த நபருக்கு என்ன கஷ்டம்? என்று கேட்டார். பிறகு அந்த நீண்ட விஷயம் தொடர்பாக ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அதாவது அவர்களுக்கு ஒரு யூதன் சூனியம் வைத்து விட்டான். அதன் தாக்கம் அவர்கள் மீது ஏற்பட்டு விட்டது.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த கனவு அல்லது கஷ்ஃபிற்குப் பிறகு அன்னார் தமது சஹாபாக்களுடன் அந்த கிணற்றிற்கு சென்றார்கள். அதனை ஆய்வு செய்தார்கள். அந்த கிணறு மிகவும் இருண்டதாக இருந்தது. பிறகு அன்னார் ஹஸ்ரத் ஆயிஷா அவர்களிடம் வந்தார்கள். மேலும் அவர்களிடம், ஆயிஷாவே! நான் அதைப் பார்த்து விட்டேன். அந்த கிணற்றின் தண்ணீர் மருதாணியின் தண்ணீரைப் போன்று சிவப்பாக மாறுகின்றது.

இதற்கு முன்னரும் எடுத்துக் கூறப்பட்டது. அதாவது யூதர்கள் மக்களின் பார்வையை ஏமாற்றுவதற்காக இத்தகைய கிணற்றின் தண்ணீரில் ஏதாவது நிறத்தை கலந்து விடுவார்கள். இது யூதர்களின் நடைமுறையாக இருந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம், அந்தச் சீப்பு போன்றவற்றை வெளியே எடுத்து ஏன் எறியவில்லை என்று கேட்டேன் சில அறிவிப்புகளில் ஏன் எரிக்கவில்லை என்று கேட்டதாக வருகின்றது. அதற்கு அன்னார், இறைவன் என்னை பாதுகாத்து வைத்துள்ளான். மேலும் எனக்கு குணமளித்துள்ளான். பிறகு நான் இதனை வெளியே எறிந்து மக்களிடத்தில் ஏன் ஒரு தீய விஷயம் குறித்த சர்ச்சையை செய்ய வேண்டும். அதன் மூலம் பலவீனமான இயல்பைக் கொண்டவர்களுக்கு சூனியத்தின் பக்கம் தேவையில்லாமல் கவனம் ஏற்படுவதற்கான அச்சம் இருந்தது.

அகவே அந்த கிணற்றை புதைத்து மூடச் செய்து விட்டேன்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: நினைவில் கொள்ள வேண்டும். அதாவது மற்றவர்கள் கூறியதை அடுத்து எடுத்துக் கூறும் வழிமுறை அரபிகளிடம் இருந்தது. மாறாக, திருக்குர்ஆனும் சில இடங்களில் இந்த நடைமுறையை கையாண்டுள்ளது. இரண்டு நரகவாசிகளைப் பார்த்து அல்லாஹ் கூறுகின்றான்.

(44:50) ذُقۡ ۚ اِنَّکَ اَنۡتَ الۡعَزِیۡزُ الۡکَرِیۡمُ அதாவது நரகத்தில் போடப்படக் கூடியவர்களே! இறைவனது இந்த வேதனையை சுவைப்பீராக. எவ்வித சந்தேகமுமின்றி நீ மிகவும் கண்ணியமானவனும், மிக நல்ல மனிதராகவும் இருந்தாய். இவ்விடத்தில் இறைவன் இரண்டு நரகவாசிகளையும் கண்ணியத்திற்குரியவர்கள் என்றும் நல்லவர்கள் என்றும் கருதுகின்றான் என்பது ஒருபோதும் இதன் பொருள் கிடையாது.

மாறாக, அந்த மனிதர் தன்னையும் தம்முடன் இருப்பவர்களையும் கண்ணியமானவர்கள், நல்லவர்கள் என்று கருதி வந்தனர். உலகத்தில் தவறான பணிகளைச் செய்த பிறகும் நாம் கண்ணியமிக்கவர்கள் என்று கருதி வந்தனர். நீ இப்போது இறைவனது நெருப்பின் தண்டனையை சுவைப்பீராக என்பதே இதன் பொருளாகும்.

இவ்வாறே இந்த கனவில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கனவில் காட்சியளித்த இந்த இரண்டு மனிதர்கள் அல்லது வானவர்கள் பேசினர். அவர்கள், இந்த நபருக்கு சூனியம் வைக்கப்பட்டுள்ளது என்று கூறியது, நமது எண்ணத்தில் சூனியம் வைக்கப்பட்டுள்ளது என்பது ஒருபோதும் இதன் பொருள் கிடையாது. மாறாக இதன் பொருள் என்னவென்றால், இவர்களுக்கு சூனியம் வைக்கப்பட்டதாக மக்கள் கூறினர். மேலும் கனவின் உண்மையான நோக்கம் இதுவன்றி வேறெதும் கிடையாது.

அதாவது எந்தப் பொருட்களை இந்த அசுத்தமானவர்கள் மறைத்து கிணற்றில் வைத்தார்களோ மேலும் அதன் மூலமாக தம்மைச் சார்ந்திருப்பவர்களை ஏமாற்ற விரும்பினார்களோ, மேலும் தம்மைப் போன்ற மக்களை ஏமாற்றியும், பரப்பியும் வந்தார்களோ அவர்களுக்கு இறைவனது ரஸூல் அவர்களது சூனியத்தை அழித்துக் காட்ட வேண்டும் என்பதே இந்தக் கனவின் நோக்கமாகும்.

ஆக அவ்வாறே நடைபெற்றது. சூனியம் மண்ணோடு மண்ணாக்கப்பட்டது. கிணறு மூடப்பட்டது. இவ்வாறான செயல்களினால் சாதாரண முஸ்லிம்களை அவர்கள் ஏமாற்ற விரும்பினர் என்ற பெருமானார் (ஸல்) அவர்கள் கவலை நீங்கி விட்டது. மேலும் சூனியக்காரர்கள் எந்த வழிமுறையைக் கையாண்டாலும் இறைவனது நபிக்கு எதிரில் ஒருபோதும் அவர்களால் வெற்றிபெற முடியாது என்ற இந்த இறைவாக்குறுதியும் மிகவும் வலுவுடன் நிறைவேறியது.

அதாவது, وَلَا يُفۡلِحُ السَّاحِرُ حَيۡثُ اَتٰى (20:70)

எவ்வாறிருப்பினும் மேலே கூறப்பட்ட நபிமொழியில் கீழ்க்கண்ட விஷயங்கள் நிரூபணமாகின்றது.

முதலாவதாக, ஹுதைபிய்யா உடன்படிக்கை சம்பவத்திற்குப் பிறகு மறதி என்ற கவலை இயல்பாகவே பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அதிகமாக இருந்தது. மேலும் அன்னார் வீட்டு விவகாரங்களுடன் தொடர்புடைய பல உலக விஷயங்களையும் மறந்து விடுவார்கள்.

இரண்டாவதாக, இத்தகைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவாறு இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தூய ஸ்தாபகர் (ஸல்) அவர்களின் பெயரை களங்கப்படுத்த விரும்பிய அந்த யூதர்களும், நயவஞ்சகர்களும் அன்னாரது இந்த நிலைமைகளைக் கண்டு, முஸ்லிம்களின் நபி மீது சூனியம் வைத்து விட்டோம் என்று மறைமுகமாக கூச்சல் இட்டனர். பனி முஸ்தலிக் போரில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பின்தங்கி விட்டபோது அவர்களின் பெயரைக் களங்கப்படுத்த எத்தகைய கூச்சல் இடப்பட்டதோ அவ்வாறே பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையையும் களங்கப்படுத்துவதற்கு அசுத்தமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

மூன்றாவதாக, சூனியத்தின் வெளிப்படையான அடையாளமாக சாதாரண மக்களை எளிதாக ஏமாற்றுவதற்காக இந்த அசுத்தமான மக்கள் யூத சந்ததியைச் சேர்ந்த லபித் பின் ஆஸிம் மூலமாக தமது வழிமுறைக்கேற்ப ஒரு சீப்பில் சில முடிகளைக் கட்டி அதனைக் கிணற்றில் போட்டனர். மேலும் மறைமுகமாக பேச ஆரம்பித்தனர். அது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு துன்பத்தைத் தருவதற்குக் காரணயாக அமைந்தது.

நான்காவதாக, இதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடத்தில் உருக்காமாக துஆ செய்தார்கள். அதாவது அல்லாஹ்வே! நீ உனது அருளால் இந்த குழப்பத்தை முறிப்பாயாக. மேலும் எனக்கு இதன் உண்மைத்தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவாயாக. இதன் மூலம் நான் இந்த குழப்பத்தை நீக்கி சாதாரண மக்களுக்கு தடுமாற்றம் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கட்டுமாக.

ஐந்தாவதாக, அல்லாஹ் அன்னாரது துஆவை செவியுற்றான். லபீத் பின் ஆஸிமின் செயலை வெளிப்படுத்திக் காட்டினான். எனவே அன்னார் சில சாட்சிகளை உடன் அழைத்துக் கொண்டு அந்த கிணற்றுக்கு சென்றார்கள். மேலும் அந்த சீப்பை மண்ணோடு மண்ணாக்கினார்கள். மாறாக, கிணற்றையே மூடினார்கள்.

இறுதியாக இந்த கேள்வி எழுகின்றது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் உயர் அந்தஸ்தைப் பெற்ற நபியாவார்கள். மாறாக, நபிமார்களுக்கெல்லாம் மேன்மையானவர்களாகவும், காத்தமுன் நபிய்யினாகவும் இருக்கின்றார்கள். அவ்வாறிருக்கும்போது அன்னாருக்கு ஏன் மறதிக்கான நோய் ஏற்பட்டது? வெளிப்படையில் அது நபித்துவத்தின் கடமைகளை நிறைவேற்றுவதில் தடையாக இருக்கலாம்.

இதற்கான பதில் என்னவென்றால், நாம் நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு நபியிடமும் இரண்டு அம்சங்கள் இருக்கின்றது. ஓர் அம்சத்தின் அடிப்படையில், அவர் இறைவனது நபியாகவும், ரஸூலாகவும் இருக்கின்றார். அதன் காரணமாக இறை வார்த்தைகள் அவருக்கு கிடைக்கின்றது. மேலும் மார்க்க பணிகளில் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அவர் ஆசிரியராக இருக்கின்றார். மேலும் அவர்களுக்கு அவர் முன்மாதிரியாக இருக்கின்றார்.

இன்னொரு அம்சத்தின் அடிப்படையில், அவர் மனிதர்களில் ஒரு மனிதராக இருக்கின்றார். மேலும் மற்ற மனிதர்களிடம் இருக்கின்ற அந்த அனைத்து மனித பலவீனம் மற்றும் அசாதாரண நிலைமைகளுக்கும் கீழ் அவர் வருகின்றார். எனவே அல்லாஹ் திருக்குர்ஆனில் قُلۡ اِنَّمَاۤ اَنَا بَشَرٌ مِّثۡلُکُمۡ یُوۡحٰۤی اِلَیَّ (18:111) அதாவது நபியே! நீர் மக்களிடம் கூறுவீராக! நான் உங்களைப் போன்றே ஒரு மனிதன் ஆவேன். மற்ற மனிதர்களுடன் இருக்கின்ற அந்த அனைத்து விதிமுறைகளுக்கு கீழ் நானும் இருக்கின்றேன். ஆம்! நிச்சயமாக நான் இறைவனது தூதராக இருக்கின்றேன். மேலும் இறைவன் புறமிருந்து இறை படைப்பினங்களின் வழிகாட்டலுக்காக இல்ஹாம் மற்றும் வஹீ எனக்கு கிடைக்கின்றது.

இந்த நுட்பமான வசனத்தில் நபிமார்களின் இரண்டு அம்சங்களும் மிகவும் அழகிய முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதாவது ஒரு அம்சத்தின்படி அவர்கள் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் ஆவார். இன்னொரு அம்சத்தின்படி மற்ற மனிதர்களிடம் இருக்கின்ற பலவீனத்திலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டவில்லை. எனவே எவர் நபிமார்கள் மனித பலவீனம் மற்றும் மனிதர்களின் இயல்பான நிலைமைகளிலிருந்து உயர்ந்தவர் என்று கருதுவாரோ அவர் பொய்யர் ஆவார். எவ்வாறு மற்ற மக்கள் நோய்வாய்ப்படுகின்றார்களோ அவ்வாறே நபிமார்களும் நோய்வாய்ப்படுகின்றனர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: பொதுவாக இந்த விஷயத்தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ஹதீஸ் மற்றும் வரலாற்றிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் டைஃபாய்டு நோயினால் மரணமடைந்தார்கள். சில குறிப்பான நபிமார்களுக்கு விதிவிலக்காக அவர்கள் குறிப்பான நோயிலிருந்து அதாவது சளி, வலிப்பு, இருமல், பதற்றம், நிம்மதியின்மை, மறதி, சண்டையினால் ஏற்படும் காயங்கள் ஆகிய நோயிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டவர்களைத் தவிர அனைத்து நோய்களும் நபிக்கும் வரலாம். மேலும் வந்திருக்கின்றது.

இவ்விடத்தில் எவருக்காவது سَنُقۡرِئُكَ فَلَا تَنۡسٰۤی (87:7) அதாவது நாம் உமக்கு எத்தகைய போதனைகளை வழங்குவோம் என்றால் அதனை நீர் மறக்க மாட்டீர் என்று வந்துள்ளதே என்ற எண்ணம் ஏற்பட்டால் அதற்கான பதிலை நாம் நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். அதாவது இந்த வாக்குறுதி திருக்குர்ஆனின் வஹீ தொடர்பாக மட்டுமே ஆகும். பொதுவானது கிடையாது.

மேலும் நபியே! நாம் எந்த வஹீயை சமுதாயத்தை வழிகாட்டுவதற்காக அருளுவோமோ அதனை நீர் மறக்க மாட்டீர். மேலும் கியாமத் வரை நாம் அதனை பாதுகாப்போம் என்பதே அதன் பொருளாகும். அன்றாடப் பணிகள் தொடர்பான விஷயங்கள் அல்லது உலக விவகாரம் தொடர்பாக இந்த வாக்குறுதி ஒருபோதும் கிடையாது.

எனவே நபிமொழியிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால், அன்னார் பல சந்தர்ப்பங்களில் மனிதன் என்ற அடிப்படையில் மறந்திருக்கின்றார்கள். மாறாக, நபிமொழிகளில் எந்த அளவுக்குக் கூறப்பட்டுள்ளதென்றால், அன்னார் சில நேரங்களில் தொழுகையை நடத்தும் போது ரக்அத்துகளின் எண்ணிக்கையை மறந்து விட்டார்கள். மக்கள் நினைவூட்டினார்கள் அல்லது நினைவுக்கு வந்தது என்று வந்துள்ளது.

புகாரி மற்றும் முஸ்லிம் ஆகிய இரண்டிலும் இந்த நபிமொழி காணப்படுகிறது. அவ்வாறே வேறு சில சந்தர்ப்பங்களிலும் அன்னார் மறந்திருக்கின்றார்கள். மாறாக நபிமொழியில் பெருமானார் (ஸல்) அவர்கள் தம்மைப் பற்றி கூறும்போது, اِنَّمَا اَنَا بَشَرٌ اَنْسٰی کَمَا تَنْسَوْنَ فَاِذَا نَسِیْتُ فَذَکِّرُوْنِیْ அதாவது நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன் ஆவேன். எவ்வாறு நீங்கள் சில நேரங்களில் மறந்து விடுகின்றீர்களோ அவ்வாறே நானும் மறந்து விடலாம். நான் ஏதாவதொரு விஷயத்தில் மறந்து விட்டால் பிறகு எனக்கு நினைவூட்டுங்கள். (அபூதாவூது)

ஆக எவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு சில நேரங்களில் தற்காலிக மறதி ஏற்பட்டு விடுமோ அவ்வாறே ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு நோயின் வடிவில் மறதி ஏற்பட்டது. ஆக இதுவே சூனியம் தொடர்பான அறிவிப்புகளில் சில கடந்த கால ஆலிம்கள் கொடுத்த விளக்கமாகும். உதாரணமாக, அல்லாமா மஆஸரி கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைக்கு எண்ணற்ற வலுவான ஆதாரங்கள் இருக்கின்றன. மேலும் அன்னாரது அற்புதங்களும் அன்னாரின் உண்மைத்துவத்திற்கு சாட்சியாகும். மற்ற பொதுவான உலக பணிகளுக்காக அன்னார் அனுப்பப்படவில்லை. எனவே எவ்வாறு மனிதனுக்கு மற்ற நோய்கள் வருகின்றதோ அவ்வாறே இது தொடர்பாகவும் அது ஒரு நோய் என்றே புரிந்து கொள்ளப்படும்.

அல்லாமா இப்னு அல்கஸார் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட மறதி நோயானது மற்ற நோய்களைப் போன்ற ஒரு நோயாகும். அவ்வாறே நபிமொழியின் இறுதியில் வருகின்ற, அல்லாஹ் என்னை குணமாக்கினான் என்ற சொல்லிலிருந்து இது வெளிப்படுகின்றது. அதில் வெளிப்படையாக அது எழுதப்பட்டுள்ளது.

சுருக்கமாக கூறுவதென்றால், ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இருந்த நிலைமைகளைக் கண்டு எதிரிகள் சூனியம் வைக்கப்பட்டது என்று கூறினர். ஆனால் அது ஒருபோதும் சூனியத்தினால் கிடையாது. மாறாக, ஏற்பட்ட நிலைமைகளினால் வெறும் மறதிக்கான நோயாகவே இருந்தது. அது மறதி நோய் ஆகும். இதனை சில குழப்பம் விளைக்கக் கூடியவர்கள் தூய நபி (ஸல்) அவர்களின் இருப்பிற்கு எதிராக பிரச்சாரம் செய்வதற்கு வழியாக ஆக்கிக் கொண்டார்கள்.

திருக்குர்ஆன் நபிமார்கள் மீது சூனியம் வைக்கப்பட்டது என்ற கட்டுக்கதையை தூரத்திலிருந்தே எட்டி உதைக்கின்றது. அதனை மறுக்கின்றது. மனித சிந்தனை இதனை ஏற்றுக் கொள்வதை நிராகரிக்கின்றது. சூனியம் தொடர்பாக உயர் அந்தஸ்தைப் பெற்ற நபியின் மீது இட்டுக்கட்டப்படுகின்ற கதையை நபிமொழியின் சொற்கள் இந்த விளக்கத்தை பொய்ப்படுத்துகின்றது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இந்த விஷயத்தையும் கூறியுள்ளார்கள். இதனை எடுத்தக் கூறுவதும் பயனற்றதாக இருக்காது. அதாவது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் அறிவிப்பிற்கேற்ப சீரத்துல் மஹ்தியின் முதல் தொகுதியின் அறிவிப்பு எண் 75 ல் இவ்வாறு உள்ளது.

ஒரு முறை வெறுப்புணர்வு கொண்ட குஜராத்தில் வசிக்கக்கூடிய ஒரு ஹிந்து காதியான் வந்தார். அவர் ஹெப்னாடிஸத்தில் கைதேர்ந்தவர். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சபைக்கு வந்து அமைதியாக அமர்ந்திருந்தவாறு அன்னார் மீது தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்தார். அவ்வாறு செய்து அன்னாரை ஏளனத்திற்குள்ளாக்கலாம் என்று நினைத்தார். ஆனால் அவர் அன்னார் மீது தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்த உடன் கூச்சலிட்டவாறு அங்கிருந்து ஓடினார்.

அவரிடம், உங்களுக்கு என்னவாயிற்று என்று கேட்கப்பட்டபோது, அவர் நான் மிர்ஸா சாஹிபின் மீது தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்தபோது எனக்கு முன்பாக என்மீது தாக்குதல் தொடுப்பதற்கு அச்சமூட்டக்கூடிய ஒரு சிங்கம் நிற்பதைப் நான் பார்த்தேன். எனவே நான் அஞ்சியவாறு ஓடி வெளியேறினேன் என்று அவர் பதில் கூறினார்.

அன்னார் எழுதுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் தொண்டராக இருக்கின்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தஸ்து இதுவாக இருக்கின்றபோது, அன்னார் மீது ஹெப்னாடிஸத்திற்கான எந்த தாக்கத்தையும் அல்லாஹ் ஏற்படுத்த விடாமல் இருக்கின்றபோது ஒரு யூதன்

பெருமானார் (ஸல்) அவர்களை ஹெப்னாடிஸத்திற்கு ஆளாக்கினான் என்று கருதுவதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? (மஸாமீன் பஷீர் தொகுதி 3 பக்கம் 642–653)

இறுதியில் காலத்தின் நெறிநீதி தீர்ப்பவரின் இது தொடர்பான கூற்றுக்களை படிக்கின்றேன். அவை அனைத்து விளக்கங்கள் மற்றும் விரிவுரையின் மீது மேலோங்கி இருக்கின்றது.

பெருமானார் (ஸல) அவர்கள் மீது நிராகரிப்பவர்கள் செய்த சூனியம் தொடர்பாக தாங்கள் என்ன கருகின்றீர்கள்? என்று ஒரு நபர் அன்னாரது சபையில் கேள்வி கேட்டார்.

ஹஸ்ரத் அக்தஸ் கூறினார்கள்: சூனியமும் ஷய்த்தான் தரப்பிலிருந்து ஏற்படுத்தப்படுகின்றது. சூனியத்தின் தாக்கம் ரஸூல்மார்கள் மற்றும் நபிமார்கள் மீது ஏற்படுவதில்லை. மாறாக, அவர்களைக் கண்டு சூனியம் ஓடி விடுகின்றது. அல்லாஹ் وَلَا يُفْلِحُ السَّاحِرُ حَيْثُ اَتٰى (20:70) என்று திருக்குர்ஆனில் கூறுகின்றான்.

அதாவது மூஸாவிற்கு எதிரில் சூனியம் இருந்தது. மூஸா வெற்றி பெற்றாரா? இல்லையா?. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிரில் சூனியம் வெற்றி பெற்று விட்டது என்பது முற்றிலும் தவறான கூற்றாகும். நம்மால் இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. கண்களை மூடிக் கொண்டு புகாரி மற்றும் முஸ்லிம் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டே செல்வது நமது கோட்பாடுகளுக்கு மாற்றமானதாகும்.

உயர் அந்தஸ்தைப் பெற்ற நபியின் மீது சூனியம் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை அறிவும் கூட ஏற்றுக் கொள்ளாது. எந்த சூனியக்காரரின் தாக்கத்தால் பெருமானார் (ஸல்) அவர்களின் நினைவுத் திறன் இழந்து கொண்டு இருந்தது. இவ்வாறு நடந்தது; அவ்வாறு நடந்தது என்பது எந்த வகையிலும் சரியானதாக இருக்காது.

அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு அசுத்தமான மனிதன்தான் தன் தரப்பிலிருந்து இதனைக் கலந்து விட்டான் என்பது தெரிய வருகிறது. நாம் நாகரீகமான பார்வையுடன் நபிமொழிகளைப் பார்க்கின்றோம். ஆனால் எந்த நபிமொழி திருக்குர்ஆனுக்கு மாற்றமாக இருக்குமோ, பெருமானார் (ஸல்) அவர்களின் மகத்துவத்திற்கு மாற்றமாக இருக்குமோ அதனை நம்மால் எப்போது ஏற்றுக் கொள்ள முடியும்? அந்த நேரம் நபிமொழிகளை ஒன்று சேர்க்க வேண்டிய நேரமாக இருந்தது.

எனவே நபிமொழிகளை ஒன்று திரட்டியவர்கள் சிந்தித்து நபிமொழிகளை பதிவு செய்தனர். ஆனால் அவர்கள் முழுமையாக பேண முயற்சி செய்தும் முழுமையான பேணுதலுடன் இதனை அவர்களால் செய்ய முடியவில்லை. அது ஒன்று திரட்டப்படக்கூடிய நேரமாக இருந்தது. ஆனால் இப்போது பார்ப்பதற்கும், சிந்திப்பதற்குமுரிய நேரமாகும். பாருங்கள் மற்றும் சிந்தியுங்கள்.

எந்த நபிமொழி திருக்குர்ஆன் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் கண்ணியத்துடன் மோதுகின்றதோ அது நிராகரிக்கப்படுவதற்கு தகுதியானதாகும். அல்லது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் மற்றும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அளித்த விளக்கம் போன்று அதற்கு வேறு ஏதாவது விளக்கம் இருக்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நபியின் வாழ்க்கையின் நிலைமைகளை ஒன்று சேர்ப்பது மிகவும் நற்கூலிக்குரிய பணியாகும். ஆனால் ஒன்று சேர்ப்பவர்கள் முழு கவனத்துடன் ஒன்று சேர்க்க முடியாது என்பது விதிமுறையிலுள்ள விஷயமாகும். நன்றாக சிந்தித்து செயல்படுவது இப்போது ஒவ்வொருவரின் பணியாகும். ஏற்றுக் கொள்ள வேண்டியவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். விடப்பட வேண்டியவற்றை விட்டு விடுங்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சூனியம் வைக்கப்பட்டது என்ற இத்தகைய விஷயத்தினால் ஈமான் பறிபோய் விடுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்.

اِذْ يَقُوْلُ الظّٰلِمُوْنَ اِنْ تَتَّبِعُوْنَ اِلَّا رَجُلًا مَّسْحُوْرًا (17:48)

அதாவது நீங்கள் எப்படிப்பட்ட நபரைப் பின்பற்றுகின்றீர்கள் என்றால் அவர் மீது சூனியத்திற்கான தாக்கம் ஏற்பட்டுள்ளது என்று அநீதி இழைக்கின்ற மக்கள் கூறினர்.

இப்படிப்பட்ட கூற்றைக் கூறுபவர் அநீதி இழைப்பவர் ஆவார். முஸ்லிம் அல்ல. பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சூனியத்திற்கான தாக்கம் ஏற்பட்டது என்று கூறுவது ஈமானற்றவர்கள் மற்றும் அநீதியாளர்களின் பணியாகும். பெருமானார் (ஸல்) அவர்களுக்கே இந்த நிலைமை என்றால் பிறகு சமுதாயம் எங்கு எஞ்சியிருக்கும்? பிறகு அது மூழ்கவே செய்யும் என்பதைக் கூட சிந்திப்பதில்லை. எந்த தூதர் (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களும் ஷய்த்தானிடமிருந்து தூய்மையானவர்கள் என்று கருதி வந்தார்களோ அந்த நபியின் கண்ணியத்தின் மீது இத்தகைய சொற்களை கூறுகின்ற இம்மக்களுக்கு என்னவாயிற்று என்று தெரியவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 471–472)

நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்தை புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும், அடையாளங்கண்டு கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَّبَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

(அல் ஃபஸல் இன்டர்நேஷனல் 22–29 மார்ச் 2019 பக்கம் 13–17)

## *ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த துஆக்களிலிருந்து.....*

يَا مَنْ هُوَ اَحَبُّ مِنْ كُلِّ مَحْبُوْبٍ اِغْفِرْلِيْ وَتُبْ عَلَيَّ وَاَدْخِلْنِيْ فِيْ عِبَادِكَ الْمُخْلَصِيْنَ

☆ எல்லா அன்பிற்குரியவர்களை விடவும் அதிகமாக அன்பு காட்டத் தகுந்தவனே என்னை மன்னிப்பாயாக. என்மீது கருணையை பொழியச் செய்வாயாக. மேலும் என்னை உன்னுடைய கலப்பற்ற அடியார்களோடு சேர்ப்பாயாக. நாங்கள் உன்னுடைய பாவம் மிகைத்த அடியார்கள் மற்றும் மன இச்சைகளால் மிகைத்தவர்கள் ஆவோம். நீ எங்களை மன்னிப்பாயாக. மேலும் மறுமையின் துன்பத்திலிருந்து எங்களைப் பாதுகாப்பாயாக.

(அல் ஹகம் 10 ஆகஸ்ட் 1901 ஆம் ஆண்டு, தொகுதி 5 பக்கம் 9 நம்பர் 29 – பதர் 26 ஜூலை 1906 ஆம் ஆண்டு, தொகுதி 2 பக்கம் 3 இதழ் 30)


### *நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

எந்நிலையில் இருக்கின்றோம் என்பதை சுயமே ஆய்வு செய்ய வேண்டும்.'' (ஜுமுஆ குத்பா 1 டிசம்பர் 2017)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

யாரெல்லாம் பள்ளிவாயிலுக்கு அருகில் வசிக்கின்றார்களோ அவர்கள் தத்தமது பள்ளிவாயிலிலோ அல்லது தொழுகை செண்டரிலோ தொழுகையைத் தொடர்ந்து கடைபிடித்து வாருங்கள். குறிப்பாக ஃபஜ்ர் தொழுகைக்குச் செல்லுங்கள். உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் பள்ளிவாயில்களை நிரப்புவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாகப் பொறுப்பாளர்கள், ஜமாஅத் உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் வக்ஃபே ஸிந்தகீ – வாழ்வை அர்ப்பணித்தவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தினால் தொழுகைக்கு வரக்கூடியவர்களின் எண்ணிக்கையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். (ஜுமுஆ குத்பா 15 ஏப்ரல் 2016)

துஆ தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கீழ்க்கண்ட கூற்றுக்களை அன்னார் எடுத்துக் கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைஞானம் பெற்ற பிறகு அருளின் மூலமாக உருவாகக் கூடிய துஆவின் தோற்றமும், தன்மையும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். அது தன்னையே மாய்த்துக் கொள்ளக் கூடியதாகும். அது உருக்கக்கூடிய நெருப்பாகும். அது கருணையை ஈர்க்கக்கூடிய ஒரு காந்த சக்தியாகும். அது இறுதியில் வாழ்வளிக்கக்கூடிய ஒரு மரணமாகும். அது கரையில் சேர்க்கக்கூடிய ஒரு படகாக மாறக்கூடிய ஒரு கடும் புயலாகும். அது ஒவ்வொரு சீர்கேடான விஷயத்தையும் சீர் செய்யக்கூடியதாகும்.

ஒவ்வொரு விஷத்தையும் முறிக்கக்கூடிய மருந்து இதுவே ஆகும். சோர்வின்றி துஆ செய்யும் அந்தக் கைதியும் அருளுக்குரியவன். ஏனென்றால் அவன் ஒருநாள் விடுதலை பெற்று விடுவான். சோர்வின்றி துஆ செய்கின்ற குருடர்களும் அருளுக்குரியவர்கள். ஏனென்றால் ஒருநாள் அவர்கள் பார்வையைப் பெற்று விடுவார்கள். கல்லறைகளில் இருந்தவாறு துஆவினால் இறை உதவியை நாடுபவர்களும்.

அருளுக்குரியவர்களே! ஏனென்றால் ஒருநாள் அவர்கள் கல்லறையிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். துஆ செய்வதில் ஒருபோதும் சோர்வடையாமலும் உங்கள் ஆன்மா துஆவினால் உருகியும் உங்கள் கண்கள் கண்ணீரைச் சிந்தியும் அதன் மூலம் உங்கள் உள்ளத்தில் ஒருவிதமான நெருப்பை மூட்டி விட்டு உங்களைத் தனிமையின் இன்பத்தை ரசிப்பதற்காக இருள் சூழ்ந்த கூடாரங்களிலும் மனித நடமாட்டமில்லாத காடுகளிலும் அழைத்துச் சென்று உங்களை அமைதியற்ற பைத்தியக்காரனைப் போல் ஒன்று மற்றவனாக ஆக்கி விடும் போது நீங்கள் அருளுக்குரியவர்களே!

ஏனென்றால் இறுதியில் உங்கள் மீது அருள் செய்யப்படுகிறது. நாம் எந்த இறைவன் பக்கம் அழைக்கப்படுகின்றோமோ அந்த இறைவன் மிகப்பெரிய வள்ளலும், கருணையாளனும், வெட்கத்திற்குரியவனும் உண்மையாளனும் நன்றியுடையவனும் ஏழைகளிடம் இரக்கம் காட்டுபவனுமாவான்.

எனவே நீங்கள் நம்பிக்கையுடைவர்களாகவும் உண்மையான உள்ளத்துடனும் நன்றியுணர்வுடனும் துஆ செய்யுங்கள். அப்போது அவன் உங்கள் மீது கருணை காட்டுவான். துஆ செய்பவர்களுக்கு இறைவன் அற்புதத்தை வெளிப்படுத்துவான் மேலும் அவனிடம் கேட்கின்றவர்களுக்கு வழக்கத்திற்கு மாற்றமான ஓர் அருள் வழங்கப்படும்.

துஆ இறைவனிடமிருந்தே வந்து மீண்டும் அவனிடமே சென்று விடுகிறது. உங்கள் உயிர் உங்களுக்கு அருகில் இருப்பது போல் துஆவின் மூலம் இறைவன் உங்களுக்கு அருகில் வந்து விடுவான். துஆவின் முதல் அருள் என்னவென்றால் அது மனிதனுக்குள் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அந்த மாற்றத்தின் காரணமாக இறைவனும் தனது பண்புகளில் மாற்றத்தை வெளிப்படுத்துகிறான்.

இறைவனது பண்புகள் மாற்றமில்லாதவையாக இருப்பினும் தன்னுள் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியவருக்கு முன் உலகம் அறியாத கண்டிராத ஒரு புதிய தோற்றத்துடன் தோன்றுவான். ஆக, துஆ ஒரு பிடி மண்ணை விலை உயர்ந்த ஒரு பொருளாக ஆக்கக்கூடிய ஒரு ரசவாதமாகும். மேலும் உட்புறத்திலுள்ள அசுத்தங்களைத் தூய்மைப்படுத்தக்கூடிய நீராகும். இந்த துஆவினால் ஆன்மா உருகி நீரைப்போல் ஏக இறைவனின் சந்நிதானத்தில் விழுகிறது.

(லெக்சர் ஸியால்கோட். ரூஹானி கஸாயீன் தொகுதி 20 பக்கம் 222)

இஸ்திக்ஃபார் தொடர்பாக அன்னாரது சொற்பொழிவிலிருந்து இரண்டு மேற்கோள்கள் எடுத்து வைக்கப்படுகின்றன.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

முழு உலகிலும் இஸ்லாத்தின் கொடியை உயரமாகப் பறக்க விட வேண்டும் என்பது நமது ஜமாஅத்தின் பொறுப்பாகும். இந்த மிகப்பெரிய பொறுப்பை நிறைவேற்றுவதற்காக நம்முடைய அனைத்து மனித பலவீனங்களையும் அல்லாஹ்வின் மன்னிப்பின் போர்வையின் கீழ் மறைத்து வைப்பதும் அதை வெளிப்படாமல் இருக்கச் செய்வதும் அவசியமாகும்.

இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காக ஜமாஅத்திலுள்ள 25 வயதிற்கு அதிகமாக உள்ள அனைத்து ஆண்களும் பெண்களும் ஒரு நாளில் குறைந்தது 100 முறையும், 15 முதல் 25 வயதிற்கு உட்பட்டவர்கள் ஒருநாளில் 33 முறையும், 7 முதல் 15 வயதிற்கு உட்பட்டவர்கள் ஒருநாளில் 11 முறையும், 7 வயதிற்கும் கீழுள்ள சிறுவர் சிறுமியர்கள் ஒருநாளில் குறைந்தது 3 முறையாவது இஸ்திக்ஃபார் – பாவமன்னிப்புக் கோர வேண்டும்.

(ஜுமுஆ குத்பா 28 ஜூன் 1968)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

ஷய்த்தான் மனிதனைத் தூண்டி விடும்போது கட்டுப்படாமல் இரு; இன்னின்ன தீமைகளைச் செய்யாதே என வெளிப்படையாகக் கூறுவதில்லை. மாறாக, நன்மையைச் செய்ய விடாமல் தடுத்து தீமைகளின் பக்கம் அழைத்துச் செல்கிறான். ஆக, ஷய்த்தானின் அன்பை அன்பு என்று எண்ணியவாறு அவனை வாழ்க்கையில் நுழைய விடாதீர்கள். எந்நேரமும் பாவமன்னிப்புக் கோரியவாறு இறைவனது பாதுகாப்பில் வருவதற்கு ஒவ்வோர் அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும்.

ஷய்த்தானிடமிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான மிகப்பெரிய அடைக்கலம் அல்லாஹ் ஒருவனே ஆவான். இந்த சீர்குலைந்த

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 11 April 2019 Issue No. 15

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

காலத்தில் இஸ்திக்ஃபார் செய்தவாறு அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் இஸ்திக்ஃபார் மூலமாகவே மனிதன் அல்லாஹ்வின் பாதுகாப்பில் வர முடியும். (ஜுமுஆ குத்பா 20 மே 2016)

இந்த அமர்வின் மூன்றாவது மற்றும் இறுதி சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா சுல்தான் அஹ்மது சாஹிப் ஜஃபர் (நாஸிம் இர்ஷாத் வக்ஃபே ஜதீத் காதியான்) அவர்கள், உண்மையான இறையமைப்பாகிய நுவுவ்வத் வழியிலான கிலாஃபத் அமைப்பும் அதன் அருட்களும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள்.

அன்னார் கிலாஃபத்தின் அருட்கள் தொடர்பாக எடுத்துக் கூறியவாறு கூறினார்கள்: அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْاَرْضِ كَمَا
اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ (24:56)

அதாவது கிலாஃபத் மூலமே அல்லாஹ் அவர்களுக்காக விரும்பிய அந்த மார்க்கத்திற்கு அமைதியையும், உறுதிப்பாட்டையும் வழங்குவான்.

இந்த வசனத்திற்கேற்ப ஜூலை 2017 முதல் ஜூன் 2018 வரை உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மீது இறங்கிய இறை அருட்களைப் பற்றி சுருக்கமாக அன்னார் எடுத்துக் கூறினார்கள்.

கடந்த ஒரு வருடத்தில் இரண்டு புதிய நாடுகளுடன் சேர்த்தது மொத்தம் 212 நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் செடி நடப்பட்டு விட்டது.

இதுவரை 75 மொழிகளில் திருக்குர்ஆன் முழுவதுமாக மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிடப்பட்டு விட்டது.

180 புதிய பிரச்சார நிலையங்கள் அமைத்தன் மூலம் உலகம் முழுவமும் உள்ள மொத்த பிரச்சார நிலையங்களின் எண்ணிக்கை 2826 ஆகும்.

411 புதிய பள்ளிவாசல்களுடன் சேர்த்து தற்போது வரை முழு உலகிலும் ஜமாஅத் பள்ளிவாசல்களின் மொத்த எண்ணிக்கை 17411 ஆகும்.

அல்லாஹ்வின் அருளால் முழு உலகிலுமுள்ள வக்ஃபே நவ் உறுப்பினர்களின் எண்ணிக்கை 66525 ஆகும்.

இப்போது உலகில் 12 சேடிலைட்கள் மூலம் MTA வின் ஐந்து சேனல்களையும் 24 மணி நேரம் பார்க்க முடிவும். அவ்வாறே 21 வானொலி நிலையங்கள் இரவு பகலாக உண்மையின் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றது.

முழு உலகிலும் 714 பள்ளிக் கூடங்கள், 37 மருத்துவமனைகள் மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத் இரவு பகலாக மனித இனத்திற்குத் தொண்டு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. 49 நாடுகளில் மனிதம் முதலில் என்ற தொண்டு நிறுவனம் மூலம் மிகப் பெரிய அளவில் மனித இனத்திற்குத் தொண்டாற்றி வருகின்றது.

இன்று உலகில் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே இஸ்லாத்தின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்காக வேதனைகளையும் கஷ்டங்களையும் சந்தித்து வருகின்றது. சில நாடுகளில் மிகப் பெரிய அளவில் எதிர்ப்பு இருந்து வருகின்றது. இதற்கான உதாரணம் இஸ்லாத்தின் தொடக்க காலத்தைத்தவிர வேறெங்கும் தென்படுவதில்லை. இன்று உலகம் முழுவதும் இஸ்லாத்தின் தலை உயர்த்துவதற்காக கிலாஃபத்தின் நிழலின் கீழ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள்தான் தம் குழந்தைகளை மார்க்கத்திற்குத் தொண்டாற்றுவதற்காக வக்ஃப் (அர்ப்பணம்) செய்கின்றனர். இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காகத் தம் சொந்த நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

கலிமாவின் மகிமையை நிலைநாட்டுவதற்காக அடி வாங்குகின்றனர். இஸ்லாத்தின் மீதுள்ள அன்பின் காரணமாக இறை வழியில் சிறை வாசம் சென்று பல வருடங்களாக இருட்டு அறையில் கிடக்கின்றனர். மேலும் இதற்காக உயிர்களையும் காணிக்கையாக்குகின்றனர். ஆனால் இவ்வளவும் அனுபவித்த பின்னரும் அவர்களின் உறுதிவாய்ந்த பாதத்தில் சின்ன நடுக்கம் கூட வந்ததில்லை.

காதியான் என்ற அறியப்படாத குக்கிராமத்திலிருந்து எழுந்த ஓசையின் எதிரொலி இன்று உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் இந்த குரலுக்கு ஒரு மகத்துவமும் ஏற்புடைமையும் வழங்கியுள்ளான். உலகின் தொலை தூரத்தில் உள்ள அறிஞர்கள் இதன் முக்கியத்துவம் மற்றும் பயன் கருதி இதை மிகவும் கவனமாகக் கேட்டு இதன் உண்மைத் தன்மையை ஒப்புக் கொள்கிறார்கள். உண்மை இதுவாகும்.

கிலாஃபத் நிழலின் கீழ் அஹ்மதிய்யா ஜமாஅத் உலகளவில் மிகவும்ம பிரபலமடைந்து விட்டது. ஒவ்வொரு நொடிப்பொழுதும் எல்லா இடங்களிலும் அஹ்மதிய்யத்திற்கு இறைவனின் உதவியின் சூரியன் எப்போதும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. இன்று உலகின் எந்தவொரு பகுதியும் இதன் அருளிலிருந்து விலகியதல்ல.

ஒவ்வொரு நொடிப்பொழுதும் எல்லா இடங்களிலும் அஹ்மதிய்யத்திற்கு இறைவனின் உதவியின் சூரியன் எப்போதும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது என இன்றும் நாம் எவ்வித அச்சயமும் தயக்கமுமின்றி கூற முடியும். மேலும் இறை உதவிகளின் நிழலின் கீழ் இஸ்லாத்தின் உலகளாவிய வெற்றியின் வாக்களிக்கப்பட்ட விடியல் வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கின்றது.

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*

**திருக்குர்ஆனிலிருந்து....**

நீ இரவை பகலில் நுழையச் செய்கின்றாய். பகலை இரவில் நுழையச் செய்கின்றாய். உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகின்றாய். மேலும் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகின்றாய். மேலும் நீ விரும்புவருக்கு அளவின்றி வழங்குகின்றாய். (3:28)

**ஃபைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press, Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad